# குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள் தொகுப்பேடு



## புதிய சேர்க்கை
## இயற்கையியல் பிரிவு தொகுப்பு - XV

ஆசிரியர்
திருமதி ம.ந. புஷ்பா
காப்பாட்சியர், தாவரவியற் பிரிவு
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.

வெளியிட்டோர்
அரசு தொல்லியல் மற்றும்
அருங்காட்சியகத் துறையின் ஆணையர்
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.

# குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள் தொகுப்பேடு

## புதிய சேர்க்கை
## இயற்கையியல் பிரிவு தொகுப்பு - XV

ஆசிரியர்
திருமதி ம.ந. புஷ்பா
காப்பாட்சியர், தாவரவியற் பிரிவு
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.

©

வெளியிட்டோர்
அரசு தொல்லியல்
மற்றும்
அருங்காட்சியகத் துறையின் ஆணையர்
அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008.

முதற்பதிப்பு: 2002

விலை ரூ. 60/-

©
சென்னை அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

வெளியிட்டோர்:
அரசு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத்தின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

## பொருளடக்கம்


| | | ப.எண். |
|---|---|---|
| I. | அணிந்துரை | v |
| II. | வாழ்த்துரை | vii |
| III. | முகவுரை | viii |
| IV. | 1. அடும்பு | 1 |
| | 2. அவரை | 2-3 |
| | 3. ஆத்தி | 4-5 |
| | 4. ஆரம் | 6 |
| | 5. ஆவிரை | 8-9 |
| | 6. உந்தூழ் | 10-11 |
| | 7. எருவை | 12-13 |
| | 8. கண்ணி | 14-15 |
| | 9. கருவிளை | 16-17 |
| | 10. கலப்பைக்கிழங்கு | 18-19 |
| | 11. காயா | 20 |
| | 12. குறிஞ்சி | 21 |
| | 13. குல்லை | 22-23 |
| | 14. கூவிரம் | 24-25 |
| | 15. கொகுடி | 26 |
| | 16. கொன்றை | 27 |
| | 17. கோங்கு | 28-29 |
| | 18. சிந்துவாரம் | 30-31 |
| | 19. சுள்ளி | 32 |
| | 20. சூரல் | 33 |

| | | ப.எண் |
|---|---|---|
| | 21. செங்கோட்டுவேரி | 34 |
| | 22. செருந்தி | 35 |
| | 23. சேடல் | 36-37 |
| | 24. தாமரை | 38-39 |
| | 25. திலகம் | 40-41 |
| | 26. தும்பை | 42-43 |
| | 27. தேமா | 44-45 |
| | 28. நந்தி | 46-47 |
| | 29. நரந்தம் | 48-49 |
| | 30. நீள்நறுநெய்தல் | 50-51 |
| | 31. பாரம் | 52 |
| | 32. பாலை | 54-55 |
| | 33. பிண்டி | 56-57 |
| | 34. புழகு | 58 |
| | 35. புன்னை | 60-61 |
| | 36. பூளை | 62-63 |
| | 37. மருதம் | 64 |
| | 38. முல்லை | 67 |
| | 39. வகுளம் | 70-71 |
| | 40. வடவனம் | 72 |
| | 41. வள்ளி | 73 |
| | 42. வாகை | 74-75 |
| | 43. வாழை | 76-77 |
| | 44. வெட்சி | 78-79 |
| V. | அருஞ்சொற்பொருட்கள் | 80 |
| VI. | துணை நூற்பட்டியல் | 82 |
| VII. | நூல் குறுக்கத்தின் முழுப்பெயர் | 84 |

முனைவர் ரா. கண்ணன்,
பிஎச்.டி., இ.ஆ.ப.,
தொல்லியல் மற்றும்
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
எழும்பூர், சென்னை–600008.

தொலைபேசி:
(அ) 8261578
(இ) 4341209
(நிகரி) 8218735

## அணிந்துரை

பல்நோக்கு அருங்காட்சியகமாகத் திகழும் சென்னை அரசு அருங்காட்சியகத்தின், தாவரவியற் பிரிவு தனது பல்வேறுப் பணிகளுடன், அண்மைக்காலத்தில் குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள் சேகரிப்பில் ஈடுபட்டு, சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட தாவரங்களைக் கவினுறக் காட்சியில் வைத்துள்ளது. இவற்றுள் நாற்பத்து நான்கு தாவரங்களுக்கு உரிய வகைபாடு, வழங்கப்படும் பல்வேறு மொழி மற்றும் இலக்கியப் பெயர்கள், தாவர விளக்கம் ஆகியவை தாவரவியற் பிரிவுக் காப்பாட்சியர் திருமதி ம.ந. புஷ்பா அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது. இது தாவரவியலாளர் மட்டுமின்றி, ஆய்வாளர், மாணாக்கர்கள், இலக்கிய ஈடுபாடு உடையோர் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ரா.கண்ணன்

சென்னை –600008.
15 –3 –2003

(முனைவர் ரா.கண்ணன்,)
பிஎச்.டி., இ.ஆ.ப.)

Dr. R. KANNAN, Ph.D., I.A.S.,
Commissioner of Archaeology and Museums,
Government Museum,
Egmore, Chennai - 600 008.

Phone: Off : 8261578
Res : 4341209
Fax : 8218735

# FOREWORD

The Government Museum, Chennai, functions as a multi-purpose Museum. The Botany Section has been involved recently in the collection of plants mentioned in Tamil Sangam literature. More than fifty plants have been displayed aesthetically in the Systematic Botany Gallery. Out of this collection, Taxonomy, Tamil names, literary names along with botanical names have been given for forty-four plants, by the author Tmt. T.N. Pushpa, Curator, Botany Section. This book should be of use for Botanists, for scholars, students and those who are interested in Tamil Sangam literature.

*CHENNAI* - 600 008.
15-3-2002 AD

R.Kannan

(Dr.R.Kannan,Ph.D., I.A.S.)

# வாழ்த்துரை

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் தாவரவியற் பிரிவுக் காப்பாட்சியர் திருமதி. ம.ந. புஷ்பா அவர்கள் தம்முடைய பல்வேறு பணிகளுக்கிடையே, சங்கப் புலவர்கள் குறிப்பிட்டுள்ள தாவரங்களை இனங்கண்டு சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அவரது கடினமான உழைப்பில் முகிழ்ந்ததே 'குறிஞ்சிப்பாட்டுத் தாவரங்களின் தொகுப்பேடு' எனும் இப்படைப்பு. கபிலர் தமது குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிட்ட 99 வகை தாவரங்களுள் ஐம்பத்திற்கும் மேற்பட்ட மலர்களின் தாவரங்களை சேகரித்துப் பதப்படுத்தி, இலக்கியப் பெயர் மற்றும் தற்காலத்தில் வழங்கும் தமிழ்ப் பெயருடன், கவினுறக் காட்சிப் படுத்தி, வகைபாட்டுத் தாவரவியற் கூடத்தில் பொது மக்கள் பார்வைக்குப் படைத்துள்ளார். இதற்குத் தக்க விளக்கவுரைகளுடன் தொகுப்பேட்டினைச் சீரிய முயற்சியுடன் பொதுமக்களுக்கும், ஆர்வலர்களுக்கும் பயனுறும் வகையில் இங்கு அளித்துள்ளார். இவருடைய பணி சிறக்கவும் மேலும் பல நூல்களை ஆசிரியர் படைக்கவும் எனது வாழ்த்துக்கள்.

இடம்: சென்னை - 600 008.
நாள்: 7-03-2002

**க. இலக்குமி நாராயணன்,**
உதவி இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்.

# முகவுரை

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஒரு பிரிவாக விளங்கும் தாவரவியற்பிரிவு, முதன்மைக் கட்டிடத்தின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ளது. இதில் 1. வகைப்பாட்டுத் தாவரவியற் கூடம் 2. பொருளாதாரத் தாவரவியற் கூடம் ஆகிய இரு கூடங்களும் அமைந்துள்ளன. முதல் கூடத்தில், தாவரங்கள் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் வகைபடுத்தப்பட்டு, உலர்நிலை மற்றும் ஈரநிலைத் தாவரங்களைக் கொண்டு காட்சிபடுத்தப் பட்டுள்ளன. இக்கூடத்தின் ஒரு பிரிவாகக் 'குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள்' காட்சிபடுத்தப்பட்டுள்ளன. உலகெங்குமுள்ள பூக்கும் தாவரங்கள், சுமார் 97,000க்கும் மேற்பட்ட பேரினங்களைக் (அவற்றுள் பல சிற்றினங்களையும்) கொண்டுள்ளன.

சங்க இலக்கியங்களில், சங்கத் தமிழ்ப் புலவர்கள் நூற்றிற்கும் மேற்பட்டத் தாவரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு தக்க சான்றாகத் திகழ்வன குறிஞ்சிப்பாட்டு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற சங்கத் தமிழ் இலக்கியங்களாகும். இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தாவரங்கள், அவற்றின் பூக்கள் ஆகியவற்றை இலக்கிய நயத்துடன் சங்கப் புலவர்கள் பாடியுள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.

சங்க இலக்கியத்தில் கூறப்படும் தாவரங்களுள், ஒருசிலவற்றிற்கு பல்வேறு இலக்கியப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. சான்றாகச் செங்காந்தள், தோன்றி, கோடல் ஆகிய அனைத்து இலக்கியப் பெயர்களும், 'குளோரியோசா சூப்பர் பா' எனும் ஒரே தாவரத்தைக் குறிப்பதாகும். இது போன்றே, கருவிளை, செருவிளை ஆகிய இரண்டும் 'கிளைட்டோரியா டெர்னேஷியாவை'யே குறிக்கின்றன. இன்ன பிற சான்றுகளும் உள. எனவே, சங்க இலக்கியத் தாவரங்களின் பெயர்களைக் கொண்டு தாவரப் பெயர்களை அறிதல் சற்றுக் கடினமானதே. மேலும், ஒரே தாவரம் வேவ்வேறு இடங்களில், பல்வேறு பெயர்களால் அழைக்கப் படுவதாலும் ஒரு சில பெயர்கள் திரிந்து மருவியுள்ளதாலும் ஒரு சில தாவரங்கள் அழிந்துபட்டுள்ளதாலும், அழிக்கப்பட்டு வருவதாலும் தாவரப் பெயர்களை இனம் கண்டறிவது மிகக் கவனமுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுப் பணியாகிறது.


ஆரியவரசன் பிரகத்தனுக்கு தமிழறிவிப்பதற்காக கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டில் தலைவி பறித்ததாக குறிப்பிடப்பட்டுள்ள 99 வகை மலர்களுள், ஐம்பதிற்கும் மேற்பட்டத் தாவரங்கள் வகைபாட்டுத் தாவரவியல் கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நாற்பத்து நான்கு தாவரங்களுக்கான தாவரவியற் பெயர்கள், வகைபாடு, பல்வேறு மொழிப் பெயர்கள் மற்றும் இலக்கியப் பெயர்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன.

அருங்காட்சியக் சேகரிப்புகளுடன் இந்தியத் தாவரவியல் அளவீட்டுத்துறை, தென் மண்டலம் கோவை, சென்னைக் கிருத்துவக் கல்லூரியின் தாவரவியல் துறை, தாம்பரம் மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறையின் இணைப் பேராசிரியர் மரு.ம. ஜெகதீசன் அவர்களும் உலர்தாவரங்களை அளித்துதவியுள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்களைச் சேகரித்துக் காட்சிப் படுத்துவதில் ஊக்கமளித்த கலை, பண்பாடு மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் முன்னாள் அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு, இங்கு நன்றி கூற விழைகிறேன்.

அனைத்திற்கும் மேலாக இத் தொகுப்பேட்டை வெளியிடுவதற்கு பல்லாற்றானும் உதவிய நல் நெஞ்சினராகிய அருங்காட்சியத் துறையின் ஆணையர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைப் படைக்கிறேன். உதவி இயக்குநர் திருமிகு. க. இலக்குமி நாராயணன் மற்றும் இத் தொகுப்பேட்டில் உதவிய உதவிக் காப்பாட்சியர் திரு. கோ.அ. முருகவேல், தொழில்நுட்ப உதவியாளர் திரு. ஆ. முனுசாமி அவர்களுக்கும் இந்த ஆண்டில் இத்தொகுப்பேட்டினை வெளியீடாகக் கொணர்வதில் முனைப்புடன் செயல்பட்ட முனைவர் சி. மகேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

சென்னை - 600 008.
நாள் - 6-03-2002

**திருமதி. ம.ந. புஷ்பா,**
காப்பாட்சியர்,
தாவரவியற் பிரிவு.



அடும்பு
Ipomoea pes-caprae

# அடும்பு

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Polemoniales |
| துறை | : | பாலிமோனியேல்ஸ் |
| Family | : | Convolvulaceae |
| குடும்பம் | : | கன்வால்வுலேசி |
| Botanical Name | : | Ipomoea pes-caprae |
| தாவரவியல் பெயர் | : | ஐப்போமியா பெஸ்-கேப்ரே |
| தமிழ்ப்பெயர் | : | அடும்பு, ஆட்டுக்கால் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அடும்பு ; தெலுங்கு - பாலபன்டிட்ஜி
மலையாளம் - அடும்புவள்ளி ; இந்தி - டோப்படிலேடா

**தாவர இயல்பு:-**

படர்கொடி, சற்று வலிய கொடி, கடற்கரையில் வறண்ட மணல் மேட்டில் படர்ந்து மிக நீண்டு வளரும் தாவரம்.

**மலர்:-**

இலைக்கட்கத்தில் உண்டாகும். பெரிய தனிமலர், மணிவடிவானது. செந்நீல நிறமானது.

**இலக்கியச் சான்று:-**

**"அடும்பு அமர்ஆத்தி நெடுங்கொடி அவரை"** - குறிஞ். 87

என்று கபிலர் கூறும் 'அடும்பு' ஒரு கொடியாகும். இதற்கு நச்சினார்க்கினியர் 'அடும்பம்பூ' எனவும்,

**"வறள் அடும்பின் மலர் மலைந்தும்"** - பட். பா: 64

என்புழி. 'மணலிலே படர்ந்த அடப்பம்பூ' எனவும்

**"அடும்பிவர் அணி எக்கர்"** - கலி. 132:16

என்புழி'அடும்பங்கொடி படர்ந்த இடுமணலிலே' எனவும் உரை கூறுவாராயினர்.

## அவரை

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Polypetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணையாதவை |
| Series | : Calyciflorae |
| வரிசை | : கேலிசி:புளோரே |
| Order | : Rosales |
| துறை | : ரோசேல்ஸ் |
| Family | : Fabaceae |
| குடும்பம் | : :.பேபேசி |
| Botanical Name | : Lablab purpureus |
| தாவரவியல் பெயர் | : லாப்லாப் பர்பூயுரியஸ் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அவரை ; ஆங்கிலம் - Indian Butter bean;
தெலுங்கு - சிக்குடு; மலையாளம் - அவரா ;
இந்தி - செம்

**தாவர இயல்பு:-**

நீண்டு வளரும் சுற்றுக்கொடி, மூன்று சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலை. சிற்றிலைகள் அகன்ற 'டெல்டாயிட்' வடிவானவை. இலைச் செதில்கள் அடி ஒட்டியவை.

**மஞ்சரி,மலர்:-**

நீளமான நுனிவளர் பூந்துணர், இலைக் கோணத்திலும், கொடிநுனியிலும் உண்டாகும். 7-8 மலர்கள் இருக்கும், வெளிர் நீலநிற, வெண்ணிற மலர் உடையது; மலர்களின் வடிவம் இத்தாவரக் குடும்பத்திற்கேற்ப அமைந்திருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

குறிஞ்சிப்பாட்டில் கபிலர்,

"அடும்பமராத்தி நெடுங்கொடி அவரை" - குறிஞ். 87


என்று 'அவரை'யைக் குறிப்பிடுகின்றார். அவரை நீண்டு வளரும் ஒரு கொடி. தினையரிந்த புனத்தில் மறுவிளைவிற்காக 'அவரை' விதைக்கப்படும் போலும்; தினைத்தாளில் அவரைக் கொடி படர்ந்து பனிபெய்யும் முன்பனிக்காலத்தில் பூக்கும் என்று கடுவன் மள்ளன் கூறுவர்.

"பொரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அற்சிரம்" - குறுந். 82: 4-6

K



அவரை
**Lablab purpureus**



ஆத்தி
Bauhinia purpurea

## ஆத்தி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசி:புளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Caesalpiniaceae |
| குடும்பம் | : | சிசல்பினியேசி |
| Botanical Name | : | **Bauhinia purpurea** |
| தாவரவியல் பெயர் | : | பாகினியா பர்புயூரியா |
| இலக்கியப்பெயர் | : | ஆத்தி |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - ஆரை ; தெலுங்கு - அரி; இந்தி - ஆஸ்தா

**தாவர இயல்பு:-**

சிறுமரம், கோணல்மாணலாக வளரும். இரண்டு சிற்றிலைகள் கொண்ட கூட்டிலை, இரண்டும் அடியில் ஒட்டியிருக்கும்; கையன்ன விரி நரம்புகள் இலை நுனிவரையில் உண்டு. இலையடிச்செதில் இரண்டு; முதிருமுன்னர் உதிர்ந்துவிடும்.

**மலர்:-**

நுனிவளர்ந்த பூந்துணர்; உச்சியில் கலப்பு மஞ்சரியாக இருக்கும். மலர், வெளிர் மஞ்சள் நிறமானது ஐந்தடுக்கானது. இருபக்கச் சமச்சீரானது. பூவடிச் செதில்களும், பூவடிச் சிறு செதில்களும் உண்டு.

**இலக்கியச் சான்று:-**

முடிமன்னர் குடிகளில் முன்தோன்றி மூத்த குடியில் முதற்குடி சோழர் பெருங்குடி. சோழமன்னர் தம் குடிப்பூ 'ஆத்தி'; இதனைக் குறிஞ்சிப் பாட்டில் காணலாம்.

"அடும்பமராத்தி நெடுங்கொடி அவரை" - குறிஞ். 67

பிற சங்கவிலக்கியங்களில் அதிலும் புறநானூற்றில் ஆத்தி மலர் 'ஆர்' என்று குறிப்பிடப்படுகிறது. அதில் மூவேந்தர்களின் குடிமலர்களும் கூறப்படுகின்றன.

"வேம்பு ஆரும் போந்தையும் மூன்றும்
மலைந்த சென்னியர் அணிந்த வில்லர்
கொற்ற வேந்தர் வரினும்" - புறநா. 338:6-8

## ஆரம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Achlamydosporeae |
| வரிசை | : | ஏகிளைமைடோஸ்போரே |
| Family | : | Santalaceae |
| குடும்பம் | : | சான்டலேசி |
| Botanical Name | : | **Santalum album** |
| தாவரவியல் பெயர் | : | சான்டலம் ஆல்பம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - சந்தனம் ; இலக்கியப்பெயர் - ஆரம்;
ஆங்கிலம் - Sandal Tree; தெலுங்கு - சந்தனமு;
மலையாளம் - சந்தனம் ; சமஸ்கிருதம் - சந்தனா;
இந்தி - சான்டல், சந்தன்

**தாவர இயல்பு:-**

உயர்ந்து வளரும் மரம், 3000 அடி உயரமான மலைகளில் வளரும். இலை-எதிரடுக்கில் பளபளப்பான தனி இலைகள்; அடியும் நுனியும் குறுகிய முட்டைவடிவான இலைகள் அமைந்துள்ளன.

**மஞ்சரி, மலர்:-**

கலப்பு மஞ்சரியாகவும், நுனிவளராப் பூந்துணராகவும் காணப்படும். இலைக் கோணத்தில் கிளைகளின் நுனியில் உண்டாகும். மலர் வெண்ணிறமானது; இருபாலானது.

**இலக்கியச் சான்று:-**

"ஆரம் காழ்வை கடியிரும் புன்னை" - குறிஞ். 93

எனக் கபிலர் 'ஆரம்' எனப்படும் சந்தன மலரையும் பிற மலர்களோடு குறிப்பிடுகின்றனர்.

சந்தன மரம், குடமலை, பொதியமலை முதலான மலைகளில் வளரும் என்பதைப் புலவர்கள் கூறுவர்.

"குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்"

- பட்டினப் - 188

"................ .................. பொதியில்
சூருடை அடுக்கத்து ஆரம் கடுப்ப"

- குறுந். 376 : 1-2

## ஆவிரை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இரு வித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசி:.புளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Caesalpiniaceae |
| குடும்பம் | : | சிசல்பினேசி |
| Botanical Name | : | **Cassia auriculata** |
| தாவரவியல் பெயர் | : | **கேசியா ஆரிகுலேடா** |
| இலக்கியப்பெயர் | : | ஆவிரை |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - ஆவாரம் ; ஆங்கிலம் - Tanner's Cassia;
தெலுங்கு - டாகிடு; மலையாளம் - ஆவாரா;
இந்தி - டார்வார்

**தாவர இயல்பு:-**

ஓரிரு ஆண்டுகள் வாழும் புதர்ச்செடி இலை, அடியிலும், முடியிலும் குறுகிய 8-12 சிற்றிலைகளைக் கொண்ட பசிய கூட்டிலை. இணையடிச் செதில் - இணையடிக் காம்பின் இருபுறத்திலும் அகன்ற இதய வடிவான செதில்கள் காணப்படும்.

**மலர்:-**


மஞ்சரி - கிளை நுனியில், இலைக் கோணத்தில் நுனி வளராப் பூந்துணர் கொத்தாகத் தோன்றும். 'காரிம்போஸ்' எனப்படும். மலர் - பளிச்சென்ற மஞ்சள்நிறமானது பெரியது. 'விரிமலர் ஆவிரை' என்பது பொருந்தும் அளவுக்கு அகவிதழ்கள் விரிந்து மலரும்.

**இலக்கியச் சான்று:-**


கபிலர் "விரிமலர்" ஆவிரை வேரல் சூரல் (குறிஞ். 71) என்று ஆவிரையைக் குறிப்பிடுவார். 'ஆவிரை' என்பதற்கு, நச்சினார்க்கினியர் 'ஆவிரம்பூ,' என்று பொருள் கண்டார். இதனை 'ஆவிரம்' எனவும், 'ஆவாரை' எனவும் கூறுவர்.

ஆவாரை ஒரு குற்றுச்செடி. இதன் மலர் மஞ்சள் நிறமானது. 'விரிமலர்' 'ஆவிரை' என்பதற்கேற்ப இப்பூவில் உள்ள ஐந்து (அல்லி இதழ்கள்) அகவிதழ்களை நன்கு விரித்து இது மலரும். மலர் பொன்னை யொத்த மஞ்சள் நிறமானது என்பர் புலவர்.

"பொன்னேர் ஆவிரப் புதுமலர்" - குறுந். 173:1



ஆவிரை
Cassia auriculata



உந்தூழ்
**Bambusa arundinaceae**

## உந்தூழ்

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Monocotyledons |
| வகுப்பு | : ஒரு வித்திலைத் தாவரங்கள் |
| Series | : Glumaceae |
| வரிசை | : குளுமேசி |
| Family | : Poaceae |
| குடும்பம் | : போயேசி |
| Botanical Name | : **Bambusa arundinaceae** |
| தாவரவியல் பெயர் | : பாம்பூசா அருண்டினேசி |
| இலக்கியப்பெயர் | : உந்தூழ் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - மூங்கில் ; ஆங்கிலம் - Thorny Bamboo;
தெலுங்கு - பான்குவேடுரு; இந்தி - பான்ஸ்;
சமஸ்கிருதம் - வான்ஷ்

**தாவர இயல்பு:-**

நெடுநாள் வாழும்; ஒருதரம் பூக்கும், 80 முதல் 100 அடி வரை மிக உயரமான 'கல்ம்' (Culm) என்னும் தண்டு உடையது. 4 முதல் 7 அங். அகல முள்ளது. தண்டின் கணுவில் தோன்றும் கிளைகள் முட்களுடன் இருக்கும். மிக வலிமையானது குறுத்து - அடிமட்டத்தண்டிலிருந்து ஓங்கிவளரும் - கழிகளின் குருத்து கூரியது. இலை 8" நீளம் வரை இருக்கும். ஓர் அங்குலம் அகலம் வரை இருக்கும்.

**மஞ்சரி**

மஞ்சரி 'ஸ்பைக்லெட்' எனப்படும். 5-1 அங்குலம் கொத்தான கலப்பு மஞ்சரி நீளமானது. மலர்: மங்கிய வெண்ணிற மலர்கள் பல பூந்துணரில் இருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

குறிஞ்சிப் பாட்டில் இடம்பெற்ற 'உந்தூழ்' எனப்படும் பெரு மூங்கில் புறக்காழ் உடைமையின் புல்லெனப்படும்.

'உந்தூழ்' என்பதற்குப் 'பெருமூங்கில் பூ' என்று உரை கூறுவர் நச்சினார்க்கினியர். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் இதனை,

"உரிதுநாறு அவிழ் தொத்து உந்தூழ்" - குறிஞ். 65

என்று இதற்கு மூன்று அடைகொடுத்துப் பாடினார். தொத்துந்தூழ், என்னும் கபிலர் தொடரை, கொத்து உந்தூழ் என்றே பிரித்தனர் நச்சினார்க்கினியர்.

## எருவை

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Monocotyledons |
| வகுப்பு | : ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : Glumaceae |
| வரிசை | : குளுமேசி |
| Family | : Cyperaceae |
| குடும்பம் | : சைபிரேசி |
| Botanical Name | : **Cyperus rotundus** |
| தாவரவியல் பெயர் | : சைபிரஸ் ரோடான்டஸ் |
| இலக்கியப்பெயர் | : எருவை |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - கோரை ; ஆங்கிலம் - Nutgrass;
தெலுங்கு - துங்கமுஸ்டி; சமஸ்கிருதம் - முஸ்டா;
இந்தி - முத்தா

**தாவர இயல்பு:-**

கோரைப்புல், புதர் போல அடர்ந்து வளரும். 20 செ.மீ. உயரம், 6000 அடி உயரம் வரையிலான மலைப் புறத்திலும் வளரக் கூடியது. தண்டு - முப்பட்டையானது. இலை - பல இலைகள். 9-10 செ.மீ. நீளமும் 1-2 மி.மீ. அகலமும் உள்ளது. நடுநரம்பு எடுப்பானது. இலையடி தண்டை மூடியிருக்கும்.

**மலர்:-**

மஞ்சரி 4-6 செ.மீ. நீளமானது. 3-7 இணர்க்காம்புகள் அடியிலிருந்து வட்டமாக நீண்டு இருக்கும். மலரில் பசிய நீண்ட 3 செதில்கள் உள்ளன. மலர்க்காம்பில் 2-8 'ஸ்பைக்லெட்' உண்டாகும்.

**இலக்கியச் சான்று:-**

கபிலர், 'எருவை செருவிளை மணிப்பூங்கருவிளை'
- (குறிஞ். 68) என்பர்.

'எருவை' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'பஞ்சாய்க்கோரை' என்றும் 'கொறுக்கச்சியுமாம்' என்றும் உரை கண்டார்.

'எருவை' எனும் இக்கோரை பெருவரைப்புறத்தே வளருமென மூன்று நற்றிணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

"எருவை நீடிய பெருவரைச் சிறுகுடி"
- நற். 156:7



எருவை
**Cyperus rotundus**



கண்ணி
**Abrus precatorius**

## கண்ணி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசி:ப்புளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Fabaceae |
| குடும்பம் | : | :பேபேசி |
| Botanical Name | : | **Abrus precatorius** |
| தாவரவியல் பெயர் | : | ஏப்ரஸ் பிரிகடோரியஸ் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - குண்டுமணி ; இலக்கியப் பெயர் - கண்ணி, குன்றி;
ஆங்கிலம் - Indian Liauorice; தெலுங்கு - குருசினியா;
மலையாளம் - குன்னி; இந்தி - குன்சி;
சமஸ்கிருதம் - குன்ஜா

**தாவர இயல்பு:-**

பசிய மெல்லிய கம்பி போன்ற நீண்ட கொடி, பல சிற்றிலைகளைக் கொண்ட கூட்டிலைகள் சுற்றடுக்கில் உண்டாகும்.

**மஞ்சரி,மலர்:-**

நுனிவளர் பூந்துணர், மங்கிய செந்நிறம், அவரைப் பூப் போன்றது, 5 மெல்லிய சிறு புல்லிகள் பிரிந்து சிறுபற்கள் போன்றிருக்கும், 5 அல்லி இதழ்கள் பதாகையிதழ் வடிவான இருவிதழ்களும் நீண்டு வளைந்து இருக்கும். இதன் விதை 'குன்றிமணியாகும்', இதனை பொற்கொல்லர் தங்கம் நிறுப்பதற்கு பயன்படுத்தினர்.

**இலக்கியச் சான்று:-**

குறிஞ்சிக் கபிலர், 'குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி (குறிஞ்:72) என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர் இதற்குக் 'குன்றிப்பூ' என்று உரை கூறினார். பாரதம் பாடிய பெருந்தேவனார், 'குன்றிஏய்க்கும் உடுக்கை' (குறுந் 1:3) என்றும் குன்றிக்கொடியில் விளையும் விதையைக் கூறினார்.

" புறம்குன்றி கண்டனையரேனும் அகம்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து" - திருக்குறள் 28:7

குன்றிமணியின் பெரும்பகுதி நல்ல செந்நிறமும் ஒரு புறத்தில் சிறிது கறுப்பு நிறமும் உடையதாக இருப்பதை உவமித்துரைக்கின்றார். சங்கவிலக்கியங்கள் 'குன்றியினை' 'கண்ணி' என்கின்றன.

## கருவிளை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசி:.புளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Fabaceae |
| குடும்பம் | : | :.பேபேசி |
| Botanical Name | : | **Clitoria ternatea** |
| தாவரவியல் பெயர் | : | கிளைடோரியா டெர்னேஷியா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**
தமிழ் - காக்கட்டான் ; சங்குப்பூ, இந்தி - அபாரஜித்
ஆங்கிலப்பெயர்: Musael shell creeper
இலக்கியப் பெயர் - செருவிளை, கருவிளை

**தாவர இயல்பு:-**

கொடி- மெல்லிய கம்பி போன்ற சுற்றுக்கொடி 100 செ.மீ முதல் 150செ.மீ நீளமாகவும் சுற்றிப் படர்ந்தும் வளரும். இலை 5-9 சிற்றிலை கொண்ட கூட்டிலை. இலைக்காம்பு 5 செ.மீ முதல் 7 செ.மீ நீளமானது, இலையடிச் செதில் உண்டு. நிலையானவை.

**மலர்:-**


கருநீலநிறமானது; மிக அழகானது. இலைக் கக்கத்தில் தோன்றுவது 3-3. 5செ.மீ. வரை நீளமானது, பூவடிவச் செதில்களும், பூவடிச்சிறு செதில்களும் நிலைத்து உள்ளன. புல்லிவட்டம் குழல் வடிவானது, பசுமையானவை; அல்லிவட்டம் 5 இதழ்களால் ஆனது; பதாகை இதழ் நேராகவும் அகன்றுமிருக்கும், அடியில் ஆரஞ்சு நிறமாயிருக்கும். பக்கத்து இரு சிறகு இதழ்கள் அடியில் இணைத்திருக்கும். அடியிதழ்கள் இணைந்து உள் வளைந்திருக்கும். கரு நீலமலர் கருவிளை. வெண்மையான மலர் உடையது செருவிளை.

**இலக்கியச் சான்று:-**

"எருவை செருவிளை, மணிப்பூங் கருவிளை" (குறிஞ்-68) என்பது கபிலர் வாக்கு,

"கண்ணெனக் கருவிளை மலர" - ஐங்-464

கருவிளை என்பது கருங்காக்கணம்; செருவிளை என்பது வெண்காக்கணம். இவையிரண்டும் வெவ்வேறு கொடிகள். கருநீலப்பூக்களை உடையதால் 'கருவிளை' எனவும், வெண்ணிறப் பூக்கள் உடையதால் 'செருவிளை' எனவும் வழங்கப்பட்டன. கருவிளையும், செருவிளையும் தாவரவியலில் ஒரே சிற்றினப் பெயரால் குறிப்பிடப்படுகின்றன.



கருவிளை
Clitoria ternatea



கலப்பைக் கிழங்கு
**Gloriosa superba**

# கலப்பைக் கிழங்கு

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Monocotyledons |
| வகுப்பு | : | ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Coronarieae |
| வரிசை | : | கோரோனரியே |
| Family | : | Liliaeae |
| குடும்பம் | : | லில்லியேசி |
| Botanical Name | : | **Gloriosa superba** |
| தாவரவியல் பெயர் | : | **குளோரியோசா சுபர்பா** |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - கலப்பைக்கிழங்கு; இலக்கியப் பெயர் - செங்காந்தள்; ஆங்கிலம் - Malabar Glory Lily; தெலுங்கு - கலப்பகாடா, கஞ்செரி; மலையாளம் - மிடோனி; இந்தி - லாங்குலி, கரிஹாரி; சமஸ்கிருதம் - அக்னிமுகி, லாங்லி, அக்னிசிகா, கர்பகாட்டினி

**தாவர இயல்பு:-**

சிறுஏறு கொடி, ஒரு மீட்டர் முதல் 20 மீட்டர் வரை நீண்டு உயர்ந்து கிளைத்துப் படர்ந்து வளரும் தண்டு வலிமையுடையதன்று, இலை அமைப்புள்ளது.

**மலர்:-**

மலர்க்காம்பு, இலைக்கோணத்தில் தோன்றும், காம்பு 10 முதல் 18 செ.மீ. வரை நீண்டு தடித்தது. மஞ்சரி தனி மலர் உடையது. இருபால்பூ, பூக்காம்பில் நுனி பின்புறமாக நேர் கோணத்தில் வளைந்திருக்கும். பூவுறை ஆறு தனித்த இதழ்களாக உள்ளது. வெளிப்புறம் மலர்வதற்கு முன் பொன்னிறமாகவும், உட்புறம் குருதிச் சிவப்பு நிறமாகவும் இருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

காந்தள் கொடிக்கு, 'தோன்றி', 'கோடல்', என்று வேறுபெயர்களும் கூறப்படுகின்றன. ஆசிரியர் நச்சினார்க்கினியர் காந்தள் என்பதற்குக் 'காந்தள்பூ' என்றும் (கலி.45), 'வெண்கோடல்' என்றும் (பெரும்பா.372); (மலைபடு.519) செங்காந்தள் என்பதற்குச் 'சிவந்த கோடற்பூ' என்றும் (கலி-103); 'வெண்கோடற்பூ' என்றும் (குறிஞ்-83), தோன்றி என்பதற்குத் 'தோன்றிப்பூ' என்றும் (முல்லை.86) உரை கூறியுள்ளார்.

**"ஒண்செங் காந்த ளாம்ப லனிச்சம்"** - குறிஞ்.62

**"விண்பொருஞ் சென்னிக் கிளைய காந்தள்"** - குறிஞ்.196

**"நெடும்பெருங் குன்றத்தமன்ற காந்தள்"** - அகநா. 4:15

மலைகளில் வளரும் காந்தள் முருகப் பெருமானுக்குரிய பூவாகக் கூறப்படுகிறது.

## காயா

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Polypetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணையாதவை |
| Series | : Calyciflorae |
| வரிசை | : காலிசிஃபுளோரே |
| Order | : Myrtales |
| துறை | : மிர்டேல்ஸ் |
| Family | : Melastomaceae |
| குடும்பம் | : மெலஸ்டோமேசி |
| Botanical Name | : Memecylon umbellatum (M-edule) |
| தாவரவியல் பெயர் | : மிமிசைலான் அம்பல்லேட்டம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அஞ்சனி, காயா; ஆங்கிலம் - Iron wood tree;
தெலுங்கு - அல்லி மலையாளம் - கஷவு,கண்ணாவு

**தாவர இயல்பு:-**

குற்றுச்செடி, புதராகவும் வளரும்; தனி இலை, பளபளப்பானது; இலை விளிம்பின் ஓரமாக இலை நரம்புச் சுற்றியிருக்கும்.

**மலர்:-**

பளபளப்பான கருநீல நிறமானது, அகவிதழ்களின் உட்புறத்தில் அடியில் செந்நிறமாக இருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

'பசும்பிடி வகுளம் பல்லிணர்க்காயா' என்றார் குறிஞ்சிக் கபிலர் (குறிஞ்-70) 'பல்லிணர்க்காயா' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'பல கொத்துக்களை உடைய காயம்பூ,' என்று உரை கூறினார்.

"காயாங் குன்றத்துக் கொன்றை போல"

- நற். 371:1

"மெல்லினர்க் கொன்றையும்
மென் மலர் காயாவும்"

- கலி. 103.1

## குறிஞ்சி

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Gamopetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணைந்தவை |
| Series | : Bicarpellatae |
| வரிசை | : பைகார்ப்பலேடே |
| Order | : Personales |
| துறை | : பெர்சோனேல்ஸ் |
| Family | : Acanthaceae |
| குடும்பம் | : அகாந்தேசி |
| Botanical Name | : Strobilanthus neilgherrensis |
| தாவரவியல் பெயர் | : ஸ்ட்ரோபி லாந்தஸ் நீல்கிரியன்சிஸ் |
| தமிழ் மற்றும் இலக்கியப் பெயர் | : குறிஞ்சி |

**தாவர இயல்பு:-**

புதர்செடி, கணுக்களில் தண்டுப்பகுதி பருத்துக் காணப்படும்; இலை முழுமையானது, இலையடிச் செதில் அற்றது, குறுக்குமறுக்கு எதிர் இலை அடுக்கில் அமைந்தவை.

**மஞ்சரி,மலர்:-**

இலைக்கோணத்தில் கொத்தாக அமைந்த நுனிவளரா பூந்துணர் மலர்கள். பூவடிச்செதில், பூக்காம்புச் செதில் உடையது, காம்புடையவை, முழுமையான ஆரசமச்சீர் உடையது. வெண்மை கலந்த நீலநிறமுடையது.

**இலக்கியச் சான்று:-**

**"தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி"**

- குறிஞ். 63

**"கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு"**

- குறுந். 3:2

**"நீள்மலைக் கலித்த பெருங் கோற் குறிஞ்சி"**

- நற். 301:1

குறிஞ்சித் தெய்வமாகிய முருகனுக்கு உகந்தமலராகும்

## குல்லை

தாவரவகைபாடு:

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Lamiales |
| துறை | : | லாமியேல்ஸ் |
| Family | : | Lamiaceae |
| குடும்பம் | : | லாமியேசி |
| Botanical Name | : | Ocimum canum |
| தாவரவியல் பெயர் | : | ஆசிமம் கேனம் |

இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்

தமிழ் - நாய்துளசி ; இலக்கியப் பெயர் - குல்லை;
ஆங்கிலம் - Hoary Basil; தெலுங்கு - குகாதுளசி;
மலையாளம் - காட்டுத்துளசி; சமஸ்கிருதம் - அஜகா;
இந்தி - கல்துளசி.

தாவர இயல்பு:-

வெற்றிடங்களில் 2-4 அடி உயரம் வரையில் தழைத்துக் கிளைத்து வளரும் செடி. இது துளசிச் செடியைப் பெரிதும் ஒத்தது.

மலர்:-

மங்கிய வெண்ணிறமானது. துளசி மலரை ஒத்தது. நறுமணமுள்ளது. கிளை நுனியில் நுனிவளர் பூந்துணர், துணர்க்காம்பில் இதன் மலர்கள் அடுக்கடுக்காக உண்டாகும்.

இலக்கியச் சான்று:-

'குல்லை பிடவம் சிறுமா ரோடம்' என சங்க நூல்களில் காணப்படும் 'குல்லை' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'கஞ்சங்குல்லை' என்று உரை கண்டார். இச்செடிகள் புதர்ச் செடியாக வளர்கின்றன.

குல்லை இலையினையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தழையுடையாக இது பயன்பட்டது என்பர் நச்சினார்க்கினியர்

"முடித்த குல்லை இலையுடை நறும்பூ"

- திருமு. 201

வடுகர் குல்லையைக் கண்ணியாகக் கொண்டனர் என்று கூறுவர் மாமூலனார்:

"குல்லைக்கண்ணி வடுகர் முனையது"

- குறுந். 11.5

"குல்லை பிடவம் சிறுமா ரோடம்"

- குறிஞ் : 78



துல்லை
**Ocimum canum**



கூவிரம்
**Crataeva religiosa**

## கூவிரம்

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இரு வித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Polypetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணையாதவை |
| Series | : Thalamiflorae |
| வரிசை | : தலாமிஃபுளோரே |
| Order | : Parietales |
| துறை | : பெரைட்டேல்ஸ் |
| Family | : Capparidaceae |
| குடும்பம் | : கேப்பாரிடேசி |
| Botanical Name | : **Crataeva religiosa** |
| தாவரவியல் பெயர் | : கிரடேவா ரிலிஜியோசா |
| இலக்கியப் பெயர் | : கூவிரம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - மரலிங்கம்; மாவிலங்கம் இந்தி - பார்னா; சமஸ்கிருதம் - வருணா.

**தாவர இயல்பு:-**

பொதுவாக சாலையோரங்களிலும், வெற்றிடங்களிலும் மரமாக வளரும்.

**மஞ்சரி, மலர்:-**

நுனியில் சரிமட்ட மலர் கொத்தாக, வெளிறிய மஞ்சள் நிற மலர்கள் அமைந்துள்ளன.

**இலக்கியச் சான்று:-**

இதனைக் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் "எரிபுரை எறுழம் சுள்ளி கூவிரம்", (குறிஞ்.66) என்பர். நச்சினார்க்கினியர் கூவிரம் என்பதற்குக் 'கூவிரப்பூ' என்றெழுதியுள்ளார். சங்கப்பாடல்களில் வேறெங்கும் இப்பெயர் காணப்படவில்லை. கம்பர் 'கூவிரம்' என்ற சொல்லை ஆண்டுள்ளார்.

**"கூவிரஞ் செறிபொற் கொடித் தேரோடு"**

'கூவிரம்' என்பது தேர்த்தட்டின் எதிரில் தாமரை மொட்டுப் போன்றதோர் கைப்பிடியாம்.

## கொகுடி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Gentianales |
| துறை | : | ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : | Oleaceae |
| குடும்பம் | : | ஒலியேசி |
| Botanical Name | : | Jasminum sambac |
| தாவரவியல் பெயர் | : | ஜாஸ்மினம் சம்பக் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - குண்டுமல்லி; இலக்கியப்பெயர் - கொகுடி; ஆங்கிலம் - Arabian Jasmine; தெலுங்கு - குண்டுமல்லே; மலையாளம் - குடுமுல்லா; சமஸ்கிருதம் - மல்லிகா; இந்தி - பான்மல்லிகா

**தாவர இயல்பு:-**

பல்லாண்டு வளரும் புதர்க்கொடி; ஏறுகொடி 20 முதல் 50 மீட்டர் நீளம் படர்ந்து வளரும். இலைக் கோணத்தில் உள்ள குருத்து நீண்டு கிளைத்து வளரும். நுனியில் பூங்கொத்தாகிவிடும்.

**மலர்:-**

10-15 மலர்கள் உண்டாகும், 3-3. 5 செ.மீ. நீளம், மலர்காம்பு குட்டையானது. புல்லி இதழ்கள் பச்சை நிறமுள்ளது. அல்லி இதழ்கள் வெண்மையானவை. சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பேசப்படும் மலர் முல்லையாகும். இம்மலரிலிருந்து வாசனைத் திரவியம் எடுக்கப்படுகிறது.

**இலக்கியச் சான்று:-**

"கொகுடி முல்லை"

- திருஞா. சம். தே. வடகுரங்காடுதுறை:1

"பெருமான் கொகுடிக் கோயில்"

- திருஞா. சம். தே. திருக்கருப்பறியலூர் 10:3

"பூஞ்சோலைக் கொகுடிக்கோயில்"

- சுந்.தே. திருக்கருப்பறியலூர் 1:11

எனத் தேவாரத் திருமுறை கூறுவதைக் கொண்டு உ.வே. சாமிநாத அய்யர் இதனை ஒரு வகை முல்லை என்பர்

"ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி" - குறிஞ்.81

## கொன்றை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லிஇணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசிஃபுளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Caesalpiniaceae |
| குடும்பம் | : | சிசில்பினியேசி |
| Botanical Name | : | **Cassia fistula** |
| தாவரவியல் பெயர் | : | கேசியா பிஸ்டுலா |
| இலக்கியப் பெயர் | : | கொன்றை |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - கொன்னை; ஆங்கிலம் - Indian laburnum;
தெலுங்கு - சீலா; இந்தி - அமல்டஸ்;
சமஸ்கிருதம் - சுவர்ணகா

**தாவர இயல்பு:-**

சிறுமரம். இலைகள் கூட்டிலை, 20 முதல் 30 செ.மீ. நீளமுள்ளவை. சிற்றிலைகள் 4 முதல் 8; இணையான இலைகள், இறகு அமைப்பில் உள்ளன; நீள்முட்டை வடிவானது.

**மலர்:-**

மஞ்சரி நுனி வளர் பூந்துணர்; தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும். இலைக் கோணத்தில் வளரும். மலர் மஞ்சள் நிறமானது. மலர் காம்புடையது. ஐந்து அடுக்கானது, சமச்சீரில்லாதது, பொன்னிற மஞ்சள் நிறமானது, நறுமணமுள்ளது, பொலிவானது.

**இலக்கியச் சான்று:-**

'கொன்றை'யைத் 'தூங்கிணர்க் கொன்றை' என்றார் கபிலர் (குறிஞ்.86). சங்கத் தமிழில் கொன்றை மலரைப் பொன் மலராகப் பேசும் மரபு மிகுந்து காணப்படுகின்றது. 'கொன்றை நன்பொன்கால' (முல்லைப் :94) என்று கொன்றைப் பூ பொன்னின் ஒளியை வீசுவதாகக் கூறுவர். அதிலும் பொன்னின் மாற்றுப்பார்த்தவர் போல், 'நன்பொன்' என்றார், மேலும்

"பொன் கொன்றை" - பொருந: 201
"கொன்றை, பொன்னேர் புதுமலர்" - அகநா. 242:1
"ஈங்கை யில்வந் தூங்கிணர்க் கொன்றை" - குறிஞ். 86

# கோங்கு

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Thalamiflorae |
| வரிசை | : | தலாமிஃபுளோரே |
| Order | : | Parietales |
| துறை | : | பெரைடேல்ஸ் |
| Family | : | Bixaceae |
| குடும்பம் | : | பிக்சேசி |
| Botanical Name | : | **Cochlospermum gossypium** |
| தாவரவியல் பெயர் | : | காக்ளோஸ்பர்மம் காசிப்பியம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - தணக்கு, கோங்கிலம்; இலக்கியப்பெயர் - கோங்கு;
ஆங்கிலம் - Silk Cotton Tree; தெலுங்கு - கோன்கு;
மலையாளம் - அப்பகுடாகா; இந்தி - கும்பி

**தாவர இயல்பு:-**

மரம்; உயர்ந்து மலைப்பாங்கில் வளரும்; மரத்தில் மஞ்சள்-நிறமான பால் வடிவதுண்டு. கூட்டிலை, அடியில் நுண்மயிர் காணப்படும்;

**மலர்:-**

தனிமலர், பெரியது, காம்புள்ளது; மிக அழகானது.


**இலக்கியச் சான்று:-**


கபிலர் இதனை "விரிபூங்கோங்கம்" என்பர் (குறிஞ்.73). 'விரிபூங்கோங்கம்' என்பது குறிஞ்சிப் பாட்டுச் சொற்றொடர் (குறிஞ்.73). சங்கப்புலவர்கள் இதனைக் 'கோங்கு' எனவும் 'கோங்கம்' எனவும் கூறுவர். கலித்தொகை ஒரிடத்தில் இதனைக் 'கணிகாரம்' என்று குறிப்பிடுகின்றது.

"மாவீன்ற தளிர்மேல்
கணிகாரம் கொட்கும் கொல்"
- கலி. 143:4-5

"சினைப்பூங்கோங்கின் நுண்தாது பகர்நர்"
- அகநா. 25:10

"புல்லிதழ்க்கோங்கின் மெல்லிதழ்க்குடைப்பூ"
- நற் 48.3





சிந்துவாரம்
**Vitex negundo**

## சிந்துவாரம்

தாவரவகைபாடு:

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Lamiales |
| துறை | : | லேமியேல்ஸ் |
| Family | : | Verbenaceae |
| குடும்பம் | : | வெர்பினேசி |
| Botanical Name | : | **Vitex negundo** |
| தாவரவியல் பெயர் | : | வைடெக்ஸ் நெகுண்டோ |
| இலக்கியப் பெயர் | : | சிந்துவாரம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - வேளைநொச்சி; தெலுங்கு - வாவிலி;
மலையாளம் - வேளாநொச்சி; இந்தி - நிசின்டா;
சமஸ்கிருதம் - நிருகுன்டி

தாவர இயல்பு:-

பெரும் புதர்ச்செடி, எனினும் இது சிறு மரமாகும். வெற்றிடங்களில் தழைத்துக் கிளைத்து வளரும். இலை - கூட்டிலை, எதிர் அடுக்கில் 3 முதல் 7 வரை சிற்றிலைகள் காணப்படும். சிற்றிலைகள் நீண்டு நுனி கூரியதாக இருக்கும்.

மலர்:-

கலப்பு மஞ்சரி; கிளை நுனியில் மலர்கள் கொத்துக் கொத்தாக ஓர் அடி நீண்ட இணர்க்காம்பில் உண்டாகும்; நீலநிற மலர்கள், அரும்புகள் உருண்டை வடிவானவை. மலரடிச் செதில் சிறியது.

இலக்கியச் சான்று:-

முற்றுகையைத் தகர்த்து எழும் வீரர்கள் சூடும் பூ 'நொச்சி மலர்'. குறிஞ்சிப் பாட்டில் (89) குறிப்பிடப்படும் 'சிந்துவாரம்', என்பதற்குக் கருநொச்சி என்று நச்சினார்க்கினியர் உரை கூறுவர்.

மேலும் நொச்சியிலை தழையுடை தொடுக்கவும் பயன்படுமென்பர்.

"ஐது அகல் அல்குல் தழையணிக் கூட்டும்
கூழை நொச்சி" - அகநா. 275:16-17

## சுள்ளி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Personales |
| துறை | : | பெர்சோனேல்ஸ் |
| Family | : | Acanthaceae |
| குடும்பம் | : | அகேந்தேசி |
| Botanical Name | : | Barleria prionitis |
| தாவரவியல் பெயர் | : | பார்லேரியா பிரியோனிடிஸ் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - செம்முள்ளி; தெலுங்கு - முல்லுகொரண்டா;
மலையாளம் - ஷெம்முள்ளி; இலக்கியப்பெயர்- சுள்ளி;
சமஸ்கிருதம் - கருண்டா; இந்தி - ஜின்டி

**தாவர இயல்பு:-**

புதர்செடி, முட்களுடன் கூடியது. வறள் நிலத் தாவரம், இலைகள் தனித்தவை, இலையடிச் செதில்கள் அற்றவை. இலைக் கோணத்தில் காணப்படும் துணைமொட்டுக்கள் முட்களாக உருமாறி காணப்படும்.

**மலர்:-**

மஞ்சள் நிற மலர்கள், இருபால் மலர், கொத்தாக காணப்படும்.

**இலக்கியச் சான்று:-**

"எரிபுரை எறுழம் சுள்ளி கூவிரம்" - குறிஞ். 66

என்றார் கபிலர். இவ்வடியில் உள்ள 'சுள்ளி', என்பதற்கு 'மராமரப்பூ' என்று உரை கண்டார் நச்சினார்க்கினியர்.

## சூரல்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Monocotyledons |
| வகுப்பு | : | ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Calycinae |
| வரிசை | : | கேலிசினே |
| Family | : | Arecaceae |
| குடும்பம் | : | அரிகேசி |
| Botanical Name | : | Calamus rotang |
| தாவரவியல் பெயர் | : | கேலாமஸ் ரொட்டாங் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - பிரம்பு; இலக்கியப் பெயர் - சூரல்;
தெலுங்கு - பிமு; இந்தி - சாட்சிபெட்;
சமஸ்கிருதம் - வீடரா

**தாவர இயல்பு:-**

மிக நீளமான முட்கொடி, கொடிமுழுவதும் முட்கள் உள்ளன. இலை பிளவுபட்டது, இலைக்காம்பின் நுனியில் சாட்டையைப் போன்ற நீண்டு வளர்ந்த முள்ளுடைய 'சிர்ரஸ்' காணப்படும். பல சிற்றிலைகள் நீண்ட குத்துவாள் போன்ற வடிவானவை. இலையின் இருபுறத்தும் முட்கள் இருக்கும்.

**மலர்:-**

இக்கொடியில் உள்ள 'மஞ்சரியைப்' 'பாளை', என்று கூறலாம். இதனை 'ஸ்பேடிக்ஸ்' என்பர். இலைக்கட்கத்தில் உண்டாகும். மிகவும் கிளைத்திருக்கும். மஞ்சரியில் ஆண் பூக்களும், பெண் பூக்களும் தனித்தனியாக உள்ளன.

**இலக்கியச் சான்று:-**

'விரிமலர் ஆவிரை வேரல் சூரல்' என்றார் கபிலர் (குறிஞ்.71) சூரல் என்பதற்கு நச்சினார்க்கினியர் 'சூரைப்பூ,' என்று உரை கொண்டார். சூரல் என்பது சூரற்கொடி என்றும் சூரை என்றும் சூரையாவது 'பிரம்பு', என்றும் உரை கண்டார்.

"சூரல் மிளைஇய சாரல் ஆர் ஆற்று"

- அகநா. 228-9

"கொடுமுள் ஈங்கை சூரலொடு மிடைந்த"

- அகநா. 357.1

என்ற இவ்விரு அகநானூற்று அடிகளில் சூரல் குறிப்பிடப்பட்டுள்ளது. சூரல்கொடி மிக நீளமாக வளரும். ஆற்றங்கரைகளிலும், மலைச்சாரல்களிலும் பிரம்பு வளரும். இது ஈங்கையுடன் வளரும் என்றார் தாயங்கண்ணனார்.

# செங்கோட்டுவேரி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Heteromerae |
| வரிசை | : | ஹெட்டிரோமீரே |
| Order | : | Primulales |
| துறை | : | பிரிமியூலேல்ஸ் |
| Family | : | Plumbaginaceae |
| குடும்பம் | : | பிளம்பாஜினேசி |
| Botanical Name | : | Plumbago indica (p. rosea) |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் மற்றும் இலக்கியப்பெயர் - செங்கோட்டுவேரி, சித்திரமூலம்; தெலுங்கு - இர்ராசித்திரமூலம்; மலையாளம் - சிவப்பு கொடுவேலி; சமஸ்கிருதம் - சித்திரகா; இந்தி - சிட்ரா, இரக் த-சிட்ரா

**தாவர இயல்பு:-**

சற்று வறண்ட வெற்றிடத்திலும், வேலிகளிலும் வளர்கிறது. 2 முதல் 4 அடி வரையில் வளரும், அகன்ற தனியிலை, மாற்று அடுக்கில் இருக்கும்.

**மலர்:-**

தனிமலர், காம்பின்றி இணைந்தது, அழகிய இளஞ்சிவப்பு நிறமானது.

**இலக்கியச் சான்று:-**

'செங்கோடு வேரி தேமா மணிச்சிகை' என்பது கபிலர் வாக்கு (குறிஞ். 64). செங்கோடுவேரி என்பதற்கு 'செங்கொடுவேரிப்பூ' என்று நச்சினார்க்கினியர் உரை கூறினார். கார்ப்பருவ ஒப்பனைப் பூக்களைக் கூறும் இளங்கோவடிகள்.

"செங்கொடு வேரிச் செழும் பூம்பிணையல்" - சிலப்.: 14:91 என்றார். கொங்குவேளிர் இதனை முல்லை நிலத்து ஆற்றங்கரை மரங்களின் வரிசையில் வைத்துள்ளார். தேவையற்ற வறண்ட இடங்களிலும், வேலிகளிலும் தானே வளரும் செடியாகும்.

# செருந்தி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Disciflorae |
| வரிசை | : | டிஸ்கிஃபுளோரே |
| Order | : | Geraniales |
| துறை | : | ஜெரானியேல்ஸ் |
| Family | : | Ochnaceae |
| குடும்பம் | : | ஆக்னேசி |
| Botanical Name | : | Ochna obtusata |
| தாவரவியல் பெயர் | : | ஆக்னா அப்டுயூசேடா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - செருந்தி; இலக்கியப் பெயர் - செருந்தி;
தெலுங்கு - சுன்னரி; சமஸ்கிருதம் - கனகச்சம்பா

**தாவர இயல்பு:-**

சிறுமரம்; பழுப்பு நிறமானப் பட்டையும், செம்பழுப்பு நிறமான மரத்தையும் உடையது. இலை மெல்லியது, பசியது தலைகீழான முட்டை வடிவினது, நுனிகூரியது.

**மலர்:-**

நுனிவளராப் பூந்துணர், பொன் மஞ்சள் நிறமான எடுப்பான தோற்றமுள்ள பூங்கொத்து. அல்லி இதழ்கள் பொன்னிறமானவை. மடல்விரிந்து அழகாகத் தோன்றும்; அடியில் வட்டத்தட்டு இருக்கும். சங்க இலக்கியங்களில் செருந்தியின் அரும்பும், மலரும் குறிப்பிடப் பட்டுள்ளன.


**இலக்கியச் சான்று:-**

**"இருஞ்சாய் அன்ன செருந்தியோடு வேழம்**
**கரும்பின் அலமரும் கழனி ஊரன்"** - ஐங்: 13:1-2

என்று ஓரம்போகியார் கூறுவர். 'சாய்' என்பது பஞ்சாய்க் கோரையைக் குறிக்கும் - 'சாய்' அன்ன செருந்தியோடு வேழம் அலமரும், என்கிறார். இவற்றைக் கொண்டு பார்த்தால் 'செருந்தி' என்பது ஒருவகையான கோரை என்று எண்ண இடமுண்டு.

**"செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகம்"** - குறிஞ்:75

என்ற இக்குறிஞ்சிப் பாட்டின் அடியில் கூறப்படும் 'செருந்தி' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'செருந்திப்பூ' என்று உரை கண்டார்.



சேடல்
Nyctanthes arbor-tristis

# சேடல்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Gentianales |
| துறை | : | ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : | Oleaceae |
| குடும்பம் | : | ஒலியேசி |
| Botanical Name | : | Nyctanthes arbor-tristis |
| தாவரவியல் பெயர் | : | நிக்டான்தஸ் ஆர்போர்-டிரிஸ்டிஸ் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - பவழமல்லிகை; இலக்கியப் பெயர் - சேடல்;
தெலுங்கு - பகடமல்லே; ஆங்கிலம் - Coral Jasmine;
மலையாளம் - பவழமல்லி; சமஸ்கிருதம் - பாரிஜாதா;
இந்தி - ஹர்சிங்கார்

**தாவர இயல்பு:-**

சிறுமரம், 2-2.5 மீட்டர் உயரமானது; 1 மீட்டர் உயரத்துக்கு மேல் நன்கு வளர்ந்து கிளைத்து அடர்ந்திருக்கும். கட்டை வெளிறிய சிவப்பு அல்லது மஞ்சள் பழுப்பு நிறமானது.

**மலர்:-**

இலைக்கோணத்தில் முப்பிரிவாக உண்டாகும். 4-6 மலர்கள் காணப்படும். சிறியது, மஞ்சளும் ஆரஞ்சு வண்ணமுள்ள அகவிதழ்க் குழலும் 6 வெண்மையான இதழ்கள் விரிந்தும் காணப்படும். அழகும் நறுமணமும் உடையது. காம்பற்ற மலரடிச் செதில்களின் கட்கத்தில் உண்டாகும்.

**இலக்கியச் சான்று:-**

"சேடல் செம்மல் சிறுசெங் குரலி" குறிஞ்: 82 என்று குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சேடல் என்பது 'பவழக்கால் மல்லிகை' யாகும். இது 'பாரிசாதம்' எனவும் கூறப்படும். சிறு மரமாக வளரும்.

## தாமரை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Thalamiflorae |
| வரிசை | : | தாலாமி்.புளோரே |
| Order | : | Ranales |
| துறை | : | ரானேல்ஸ் |
| Family | : | Nymphaeaceae |
| குடும்பம் | : | நிம்ஃபியேசி |
| Botanical Name | : | **Nelumbo nucifera** |
| தாவரவியல் பெயர் | : | நிலம்போ நியூசி்.பெரா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - ஆம்பல்; ஆங்கிலம் - Indian Lotus;
தெலுங்கு - எரா டாமரா; மலையாளம் - தாமாரா;
இந்தி - கமல்; சமஸ்கிருதம் - கமலா

**தாவர இயல்பு:-**

நன்னீர்க்கொடி, குளம் குட்டை, பொய்கை முதலிய நன்னீர் நிலைகளில் வளரும். இதில் நிறத்தால் வேறுபட்ட செந்தாமரையும், வெண்தாமரையும் உண்டு. தண்டு - சேற்றில் அழுந்திய அடிமட்டத்தண்டு கிழங்கு போன்றது. இலை வட்டவடிவானது. இலைக்காம்பு 3-6 அடி நீளமானது. சிறுமுட்கள் அடர்ந்து இலையின் அடியில் நடுவில் இணைந்திருக்கும்.

**மலர்:-**

நீண்ட முள்நிறைந்த மலர்க் காம்புகளில் முகை உண்டாகும். மலர் அகன்றது. வட்டவடிவாகத் தோன்றும். பூத்த மலர் மிக அழகானது. நறுமணம் உள்ளது.

**இலக்கியச் சான்று:-**

தாமரை எனவும் கமலம் எனவும் சங்க நூல்கள் கூறும், தாமரை மலரைத் 'தெய்வமலர்' என்று கூறுவர் கோவை. இளஞ்சேரனார்; சிறுபாணாற்றுப்படை (73) இதனைத் 'தெய்வத்தாமரை' என்றுக் கூறுவதன் அடிப்படை கொண்டு.

இலைக்காம்பிலும் மலர்க்காம்பிலும் முட்கள் உள்ளமையைக் குறிக்கும் வகையில்


"தாழை தளவம் முட்டாட் டாமரை" எனப்படுகிறது
- குறிஞ். 80

"முள் அரைத்தாமரை" - சிறுபா.144

"முள்ளரைத் தாமரை புல்லிதழ்புரையும்" - பெரும்பா.114



தாமரை
Nelumbo nucifera



திலகம்
**Adenanthera pavonia**

## திலகம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| **வகுப்பு** | **:** | **இருவித்திலைத் தாவரங்கள்** |
| Sub-class | : | Polypetalae |
| **துணை வகுப்பு** | **:** | **அல்லி இணையாதவை** |
| Series | : | Calyciflorae |
| **வரிசை** | **:** | **கேலிசி:புளோரே** |
| Order | : | Rosales |
| **துறை** | **:** | **ரோசேல்ஸ்** |
| Family | : | Mimosaceae |
| **குடும்பம்** | **:** | **மைமோசேசி** |
| Botanical Name | : | **Adenanthera pavonia** |
| **தாவரவியல் பெயர்** | **:** | **அடினான்திரா பவோனியா** |
| **இலக்கியப் பெயர்** | **:** | **திலகம்** |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

**தமிழ் - ஆனைக்குண்டுமணி;** **தெலுங்கு - பண்டிகுருவேன்டா;**
**ஆங்கிலம்** - Coral wood; **சமஸ்கிருதம் - குன்சன்டானா**

**தாவர இயல்பு:-**

மரம், வளமாக வளரும் இலையுதிர் மரம். இலை இரட்டைப் பிரிவுள்ள சிறகன்ன கூட்டிலை சிற்றிலை ஓர் அங்குலம் நீளமானது; நீள் முட்டை வடிவானது. பல சிற்றிலைகள் உள்ளன. இலையடிச் செதில் நுண்ணியது. விரைவில் உதிரும் தன்மையது.

**மலர்:-**

நுனிவளர் பூந்துணர், இலைக்கட்கத்திலும் கிளை நுனியிலும் கலப்பு மஞ்சரி போன்றது. மலர் - வெளிர் மஞ்சள் நிறமானது. அகவிதழ்கள் பிரிந்தவை.

**இலக்கியச் சான்று:-**

கபிலர் 'போங்கந் திலகந், தேங்கமழ் பாதிரி' (குறிஞ். 74) என்று திலகத்தைக் குறிப்பிடுகின்றார்.

மலைபடுகடாத்தில் நன்னன் சேய் நன்னனது, அரண்மனை வாயிலில் காணப்படும் சந்தனம் முதலிய பொருள் வளத்தில் திலகப்பூவும் குறிப்படுகின்றது.

"நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்"

- மலைபடு. 520

## தும்பை

தாவரவகைபாடு:

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Lamiales |
| துறை | : | லேமியேல்ஸ் |
| Family | : | Lamiaceae |
| குடும்பம் | : | லேமியேசி |
| Botanical Name | : | **Leucas aspera** |
| தாவரவியல் பெயர் | : | லியூகஸ் ஆஸ்பிரா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - தும்பை; இலக்கியப் பெயர் - தும்பை;
தெலுங்கு - தும்மி; மலையாளம் - தும்பா;
இந்தி - சோட்ட

**தாவர இயல்பு:-**

300 அடி உயரம் வரை, வறண்ட வெற்றிடங்களில் 1-3 அடி உயரம் வரையில் வளரும் செடி. செடியில் நுண்மயிர் இருக்கும். தனி இலை, எதிர் அடுக்கில் அமைந்திருக்கும். இலைக்கோணத்தில் உள்ள கணுக்குருத்து இரு கிளைகளாக வளரும்.

**மலர்:-**

தூய வெண்ணிற மலர், பூங்கொத்தில் உண்டாகும். இவை கிளைகளில் உள்ள எதிரடுக்கான இலைகளுடன் சேர்ந்து உள்ளன. புல்லிவட்டம் குழல் வடிவானது. பசியது, நுண் மலர்கள் அடர்ந்திருக்கும்; அல்லிவட்டம் 5 இதழ்களுடன் இரு உதடுகள் போன்றிருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

"தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி" - குறிஞ். 90

என்று கபிலர் இதனைத் துழாயுடன் சேர்த்துப் பாடுகின்றார்


மேலும் தும்பைப் பூவைக் கொத்தோடு ஆடவரும் மகளிரும் அணிவதும் உண்டென்பதை முறையே புறநானூற்றிலும் (96:1) ஐங்குறுநூற்றிலும் (127:2) காணலாம்.

"ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்"

- புறநா.



தும்பை
**Leucas aspera**



**தேமா**
**Mangifera indica**

## தேமா

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Polypetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணையாதவை |
| Series | : Disciflorae |
| வரிசை | : டிஸ்கி:ப்ளோரே |
| Order | : Sapindales |
| துறை | : சாபின்டேல்ஸ் |
| Family | : Anacardiaceae |
| குடும்பம் | : அனகார்டியேசி |
| Botanical Name | : Mangifera indica |
| தாவரவியல் பெயர் | : மாங்கி:பெரா இன்டிகா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - மாங்கா; இலக்கியப் பெயர் - தேமா;
தெலுங்கு - மாமிடி; ஆங்கிலம் - Mango;
மலையாளம் - மாவ்வு; சமஸ்கிருதம் - அம்ரா, ரூடா;
இந்தி - ஆம்

**தாவர இயல்பு:-**

பெரிய மரம், கிளைத்து உயர்ந்து, பல்லாண்டு வளரும், 20 மீ உயரமான பசிய மரம். நீண்ட தனியிலைகள் மாற்றடுக்கில் இலைக் காம்புடன் இருக்கும்.

**மஞ்சரி, மலர்:-**

கலப்புப் பூந்துணர்; நுனிக்குருத்து மாந்தளிராகவோ பூந்துணராகவோ வளரும், சிறியவை, பல பாலானவை; பூக்காம்பு இணைந்திருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

சங்கத் தமிழிலக்கியத்தில் தலை சிறந்ததெனக் கருதப்படும் குறிஞ்சிப் பாட்டில் கபிலர் தேமா, கலிமா என்று இரு மா மலர்களைக் கூறுகின்றார்.

**"செங்கோடுவேரி தேமா மணிச்சிகை"** - குறிஞ். 64

**"கரந்தை குளவி கடிகமழ் கலிமா"** - குறிஞ்.76

இந்த சிற்றினம் தேமாவைக் குறிப்பதாகக் கொள்ளலாம். இம்மரம் தமிழ்நாட்டில் பலவிடங்களில் பயரிடப்படுகிறது.

## நந்தி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Gentianales |
| துறை | : | ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : | Apocynaceae |
| குடும்பம் | : | அப்போசைனேசி |
| Botanical Name | : | **Ervatamia divaricata** |
| தாவரவியல் பெயர் | : | எர்வாடமியா டைவேரிகேட்டா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அடுக்குநந்தியாவட்டை; ஆங்கிலம் - East Indian Rosebay;
தெலுங்கு - நந்திவர்தனமு; சமஸ்கிருதம் - நந்திவிரிக்ஷா;
மலையாளம் - நந்தியாவட்டம்; இந்தி - சாந்தினி

**தாவர இயல்பு:-**

புதர்ச்செடி, பல்லாண்டு வாழும்; 2-2.5 மீ உயரமாகவும், கிளைத்தும் அடர்ந்து வளரும்; தனி இலை, எதிரடுக்கில், இலைக் கோணத்தில் பல நுண்ணிய சுரப்பிகள் உள்ளன.

**மலர்:-**

வெண்மை நிறமானது. தாம்பாள வடிவானது. வட்டமாகத் தோன்றும், அழகானது. அல்லிஇதழ்கள் இணைந்து குழல் வடிவாயிருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் இதனை 'நந்தி' என்று குறிப்பிடுகிறார்.

**"நந்தி நறவ நறும்புன் னாகம்"**

- குறிஞ்.91

'நந்தி' என்பதற்கு உரை கூறிய நச்சினார்க்கினியர் 'நந்தியா வட்டப்பூ' என்றார். பிங்கலம்,


**"வலம்புரி நந்தியா வர்த்த மாகும்"**

என்று கூறி வலம்புரி என்னும் இன்னொரு பெயரையும் சேர்க்கிறார்.

**"நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பன்"**

- அப்பர் தே. ஐயாறு

என்று சிவபூஜைக்குரிய மலராக கொன்றையைக் கூறுகிறார் நாவுக்கரசர்.



நந்தி
**Ervatamia divaricata**

## நரந்தம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Monocotyledons |
| வகுப்பு | : | ஒரு வித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Glumaceae |
| வரிசை | : | குளுமேசி |
| Family | : | Poaceae |
| குடும்பம் | : | போயேசி |
| Botanical Name | : | **Cymbopogan travancorensis** |
| தாவரவியல் பெயர் | : | **சிம்போகன் டிராவான்கோரன்சிஸ்** |
| இலக்கியப் பெயர் | : | நரந்தம் |

**தாவர இயல்பு:-**

பொதுவாக சமவெளிப்பகுதியில் காணப்படும். பல்லாண்டு வாழும் புல் தாவரம்; தாவரத்தின் தண்டு கிளைத்தலற்றது ஆனால் அடிப்பகுதியிலிருந்தே கிளைகள் தோன்றி தாவரம் ஒரு கொத்தாக அமைந்து காணப்படும்; இலைகள் தனித்தவை; நீண்டு குறுகி காணப்படும்.

**மஞ்சரி, மலர்:-**

மஞ்சரி எப்போதும் தண்டின் நுனிகளில் காணப்படுகின்றன. இவை 'ஸ்பைக்லெட்டுகள்', எனப்படும். ஸ்பைக்லெட், ஒவ்வொன்றிலும் ஒன்று முதல் பல சிறு காம்பற்ற மலர்கள் குறுகிய அச்சு ஒன்றில் அமைந்து காணப்படுகின்றன.

**இலக்கியச் சான்று:-**

**"நரந்த நாக நள்ளிரு ணாறி"** - குறிஞ் : 94

கபிலர் குறிஞ்சிப்பாட்டில் கூறும் 'நரந்தம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் நரந்தம் என்றுக் கூறுவர்

**"நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி"**

- புறநா : 132:4

புறநானூற்றில் நரந்தை என்பது நறுமணம் மிக்கப்புல் எனவும் கூறப்படுகிறது.

## நீள்நறு நெய்தல்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Thalamiflorae |
| வரிசை | : | தலாமிஃபுளோரே |
| Order | : | Ranales |
| துறை | : | ராேனல்ஸ் |
| Family | : | Nymphaeaceae |
| குடும்பம் | : | நிம்ஃபியேசி |
| Botanical Name | : | **Nymphaea nouchali** |
| தாவரவியல் பெயர் | : | நிம்ஃபியா நொச்சலி |
| இலக்கியப் பெயர் | : | நீள்நறுநெய்தல் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அல்லித்தாமரை; ஆங்கிலம் - Indian Red Waterlily.

**தாவர இயல்பு:-**

நன்னீர்குளம், ஏரி, ஆகிய இடங்களில் வளரக்கூடியது, மற்றும் சிலவேளைகளில் அழகுத் தாவரங்களாக வளர்க்கப்படுகிறது. தண்டு கிழங்கு போன்றது, நீருக்கடியில் புதைந்து காணப்படும். இலை 16-22 செ.மீ. குறுக்களவு உடையது. அடிப்பகுதி இதயவடிவானது.

**மலர்:-**

10-12 செ.மீ. குறுக்களவில் காணப்படும், பொதுவாக இரவு நேரங்களில் மலரக் கூடியது.

**இலக்கியச் சான்று:-**

சங்க இலக்கியத்தில் நெய்தலைப் பற்றியப் பாடல்கள் பல உள. நெய்தல் என்னும் நீர்க்கொடி, தாமரை, ஆம்பல், குவளை முதலியவற்றுடன் சேர்ந்தும் தனித்தும் நன்னீர் நிலைகளில் வளர்வதுண்டு. இம் மலரை குறிஞ்சிப்பாட்டில்

"வாழை வள்ளி நீணறு நெய்தல்"

- குறிஞ். 79

என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.



நீள்நறு நெய்தல்
Nymphaea nouchali

## பாரம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Thalamiflorae |
| வரிசை | : | தாலாமிஃபுளோரே |
| Order | : | Malvales |
| துறை | : | மால்வேல்ஸ் |
| Family | : | Malvaceae |
| குடும்பம் | : | மால்வேசி |
| Botanical Name | : | Gossypium herbaceum |
| தாவரவியல் பெயர் | : | காஸிப்பியம் ஹெர்பேஸியம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - பருத்தி; இலக்கியப் பெயர் - பாரம்;

ஆங்கிலம் - Levant Cotton

**தாவர இயல்பு:-**

செடி கிளைத்துத் தழைத்து வளரும்; கரிய நிற மண்ணில் நன்கு வளரும்; 2-3 அடி உயரம்; பெரிதும் பயிரிடப்படுகிறது. அகன்ற தனியிலை; இலை விளிம்பு பல, அகன்ற, ஆழமான, மெல்லிய இலையடிச் சிறுசெதில்கள் பெரியவை.

**மலர்:-**

இலைக் கோணத்தில் பெரிய ஐந்தடுக்கான மஞ்சள் நிறமலர் கவர்ச்சியாகக் காணப்படும். 5 புல்லி இதழ்கள், பசியவை

அடியில் இணைந்திருக்கும். 5 அல்லி இதழ்கள் மெல்லியது எடுப்பானவை.

**இலக்கியச் சான்று:-**

"பாரம் பீரம் பைங்குருக் கத்தி" என்பது கபிலர் வாய்மொழி (குறிஞ்.92). 'பாரம்' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'பருத்திப்பூ' என்று உரைகூறியுள்ளார். பருத்தியான பஞ்சு மூடைகள் பற்றிப் புறநானூறு கூறும்.

"கோடைப் பருத்தி வீடு நிறைபெய
மூடைப் பண்டம் மிடைநிறைந் தன்ன"

- புறநா. 393:12-13



**பாலை**
**Wrightia tinctoria**

## பாலை

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Gamopetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணைந்தவை |
| Series | : Bicarpellatae |
| வரிசை | : பைகார்பெல்லேட்டே |
| Order | : Gentianales |
| துறை | : ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : Apocynaceae |
| குடும்பம் | : அப்போசைனேசி |
| Botanical Name | : **Wrightia tinctoria** |
| தாவரவியல் பெயர் | : ரைட்டியா டிங்டோரியா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - வெட்பாலை; ஆங்கிலம் - Pala Indigo-Plant;
தெலுங்கு - ஜெட்டப்பாலா; சமஸ்கிருதம் - ஐயமாரகா;
மலையாளம் - கோட்டகபாலா; இந்தி - இந்திரஜாவ்

**தாவர இயல்பு:-**

மரம், வறண்டநிலத்தில் வளரும் இலையுதிர் மரம், 8 முதல் 15 மீட்டர் உயரம் வரை வளரும். கிளை பளபளப்பானது, நுண்மயிர் ஒட்டியிருக்கும். இலை - தனி இலை எதிர் அடுக்கில் நீண்டது. இரு பக்கமும் இலையடியில் நரம்புகளில் ஓரமாக நுண்மயிர் காணப்படும்.

**மலர்:-**

மஞ்சரி, நுனிவளராக் (சைம்) கலப்பு மஞ்சரி. 8-10 செ.மீ. அகன்று இருக்கும். மலர் வெண்மை நிறமானது, 5 செ.மீ. அகலமுள்ளது. மலரடிச் செதில்கள் நுண்ணியவை. மலர்காம்பு 1.5 செ.மீ நீளம்.

**இலக்கியச் சான்று:-**

"தில்லை பாலை கல்லியர் முல்லை" குறிஞ். 77 என்றார் கபிலர். பாலை மரம், பாலை நிலத்தில் வளரும். தொல்காப்பியம் பாலை நிலத்தைக் குறிப்பிடவில்லையாயினும் முல்லை நிலத்தியல்புகளும் குறிஞ்சி நிலத்தியல்புகளும் மாறிப் போய்ப் பாலை என்ற நிலமாகத் திரியும் என்பர் சேரமுனிவர். இப்பாலை மரத்தின் தாவரவியல் பெயரைக் கண்டுகொள்வதற்குத் துணைபுரிந்தது நற்றிணைப் பாடலாகும் (நற். 107)

"கொடிறு போல் காய வாலிணர்ப் பாலை" நற். 107:3

## பிண்டி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசிஃபுளோரே |
| Order | : | Rosales |
| துறை | : | ரோசேல்ஸ் |
| Family | : | Caesalpiniaceae |
| குடும்பம் | : | சீசல்பினியேசி |
| Botanical Name | : | **Saraca asoca (S. Indica)** |
| தாவரவியல் பெயர் | : | சராகா இன்டிகா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அசோகம்; இலக்கியப் பெயர் -பிண்டி;
ஆங்கிலம் - Ashoka; தெலுங்கு - அசோகா, வஞ்சுலமு;
மலையாளம் - அசோகம்; சமஸ்கிருதம் - அஷோகா;
இந்தி - அசோக்

**தாவர இயல்பு:-**

மரம், தழைத்துக் கிளைத்துப் பரவி உயர்ந்து வளரும், 2000 அடி உயரமான மலைப் பாங்கிலும் வளர்வது. 6-12 சிற்றிலை கொண்ட கூட்டிலை, தோல் போல் தடித்திருக்கும்.

**மலர்:-**

அழல் நிறச் செம்மையானது, கிளையெல்லாம் கொத்துக் கொத்தாகப் பூக்கும். மலர்ச்செதில்கள் விரைவில் உதிர்வன. சிவந்த மலரடிச் சிறு செதில்கள் சிறிது காலம் ஒட்டியிருக்கும்.


**இலக்கியச் சான்று:-**

சங்க இலக்கியங்களில் கூறப்படும் 'பிண்டி', 'செயலை' என்பன அசோகு என்ற அழகிய மரத்தைக் குறிப்பனவாகும். 'அசோகு' என்ற சொல் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது. கபிலர் குறிஞ்சிப் பாட்டில் பிண்டி, செயலை என்ற இரு சொற்களையும் ஆளுகின்றார்.

"பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி" - குறிஞ். 88

"எரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக" - குறிஞ். 105-106

"சாய் குழை பிண்டித் தளிர்காதில் தையினாள்"
- பரிபா. 11:95



பிண்டி
**Saraca asoca**

## புழகு

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : Gamopetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணைந்தவை |
| Series | : Bicarpellatae |
| வரிசை | : பைகார்பெல்லேட்டே |
| Order | : Gentianales |
| துறை | : ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : Asclepiadaceae |
| குடும்பம் | : ஆஸ்கிளபியடேசி |
| Botanical Name | : **Calotropis gigantea** |
| தாவரவியல் பெயர் | : கலோடிராபிஸ் ஜெஜான்டியா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - அர்கம்; எருக்கு
இலக்கியப் பெயர் - புழகு;
தெலுங்கு - ஜில்லடு;
சமஸ்கிருதம் - அர்கா;
மலையாளம் - எரிக்கு;
இந்தி - அக்

**தாவர இயல்பு:-**

புதர்ச்செடி, பாழ்பட்ட வெற்றிடங்களில் வளர்வது. வெளிறிய மலரின் நிறத்தைக் கொண்டு வெள்ளெருக்கும், வெளிர் நீல மலரின் நிறத்தினால் யாண்டும் வளரும் மற்றொரு எருக்கஞ் செடியும் உள்ளன.

**மலர்:-**

கிளை நுனியில் கொத்துக் கொத்தாகத் தோன்றும், மலர்குமிழ் போன்றது. 5 புல்லி இதழ்கள், பசிய நிறத்தன; 5 அல்லி

இதழ்கள் இணைந்து 5 பட்டையாகி நீண்டு நுனி மொட்டையாக இருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

கபிலர் புறநானூற்றில் எருக்கம் புதர்செடிக்கு ஓர் இடம் வைத்துள்ளார். புல்லிய இலை (கெடு மணத்தால்) உடைய எருக்கம் பூவையும் கடவுளர் ஏற்றும் போற்றுவது போன்று, பாரிவள்ளல் தன்னிடம் வரும் அறிவற்ற எளியவரையும் வரவேற்றும் பரிசளிப்பதைக் கடமையாக்க கொண்டவன் என்பதைப் பாடுகின்றார்.

“நல்லவும் தீயவும் அல்ல; குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா; ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவன் மையே” - புறநா. 106

“அரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன்” - குறிஞ் -96

## புன்னை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Thalamiflorae |
| வரிசை | : | தலாமிஃபுளோரே |
| Order | : | Guttiferales |
| துறை | : | கட்டிஃபெரேல்ஸ் |
| Family | : | Clusiaceae |
| குடும்பம் | : | குளுசியேசி |
| Botanical Name | : | **Calophyllum inophyllum** |
| தாவரவியல் பெயர் | : | **கேலோபில்லம் இனோபில்லம்** |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - புன்னை; ஆங்கிலம் - Alexandrian Laurel;
தெலுங்கு - பொன்னா; மலையாளம் - புன்னா;
சமஸ்கிருதம் - நாகசம்பா; இந்தி - சுல்தானசம்பா

**தாவர இயல்பு:-**

சிறுமரம், அழகானது. இலை உதிராதது, என்றும் பசுமையாக இருக்கும். நன்கு கிளைத்துப் பரவி வளரும். இலை தடிப்பானது; தோல்போன்றது, மேற்புறம் பளபளப்பானது.

**மலர்:-**

கொத்தாகப் பூக்கும்; இலைக்கோணத்திலும் கிளை நுனியிலும் பூக்கள் உண்டாகும். மொட்டு - முத்துப் போன்றது, அழகானது சிறிது மங்கிய வெண்ணிறமானது. மலர் வெண்மையானது.

**இலக்கியச் சான்று:-**

குறிஞ்சிப் பாட்டில் 'புன்னை' 'ஆரங்காழ்வை' 'கடியிரும்புன்னை' (93) எனப்படும். நூற்றுக்கணக்கானப் பாடல்களில் 'புன்னை' குறிப்பிடப்படுகின்றது.

பத்துப்பாட்டில் ஒரு சில பாக்களில் இடம் பெறும் 'நாகம்' என்பதற்கு நச்சினார்கினியர் 'சுர புன்னை' என்று உரை கூறியுள்ளார்.

"தேனிமிர் நறு மலர்ப்புன்னை"

- அகநா. 170:2

"கரையன புன்னையும்"

- பரி பா. 11:17



புன்னை
Calophyllum inophyllum



**பூளை**
**Aerva lanata**

## பூளை

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Monocotyledons |
| வகுப்பு | : ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : Nudiflorae |
| வரிசை | : நூடி:.புளோரே |
| Family | : Araceae |
| குடும்பம் | : ஏரேசி |
| Botanical Name | : **Aerva lanata** |
| தாவரவியல் பெயர் | : **ஏர்வா லேனேடா** |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - சிறுபீளை; இலக்கியப் பெயர் - பூளை;
தெலுங்கு - பிண்டிகோன்டா; சமஸ்கிருதம் - ஆஸ்ட்மபயோடா;
மலையாளம் - சிறுபுளா; இந்தி - சாயா

**தாவர இயல்பு:-**

சிறுசெடி, ஓராண்டுச்செடி. ஒன்று முதல் 3 அடி உயரம் வரையில் ஓங்கிக் கிளைத்து வளரும். 3,500 அடி உயரம் வரையிலான மலைப்புறத்தும் வளரும்.

**மலர்:-**

மிகச் சிறியது. வெண்ணிற மலர்கள் கிளை முழுவதும் ஒட்டிக் கொண்டு இருக்கும்.

**இலக்கியச் சான்று:-**

சங்க இலக்கியங்கள் 'பூளைப்' பூக்களையே பேசுகின்றன. இது ஒரு சிறு புதர்செடி. வறண்ட பாழிடங்களில் வளர்வது. பூளையின் பூங்கொத்து நீளமானது. இதன் மலர் வரகுச் சோற்றை ஒத்த வடிவானது. மங்கிய வெண்ணிறமானது. கோடைக்காலத்தில் மலர்வது. மலர்கள் காற்றடிக்கும்போது வதங்கிக் குழையும். கரும்பின் பூவை ஒத்துக் காற்றில் மிதக்கும்.

"பூளை நீடிய வெருவரு பறந்தலை" - புறநானூறு 23:20

"கோடைப் பூளையின் வாடையொடு துயல்வர"

- அகநானூறு 217:5

பட்டினப்பாலையில் கோட்டை மதிலைத் தாக்க எழுந்த களிறு, பூளையொடு உழிஞைப் பூவையும் சூடிச் சென்றதாகக் கூறுவர்.

"வேறுபல் பூளையொடு உழிஞை சூடீ"

- பட்டின. 235

"குரீ இப் பூளை குறுநறுங் கண்ணி" - குறிஞ்:72

## மருதம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Calyciflorae |
| வரிசை | : | கேலிசி:புளோரே |
| Order | : | Myrtales |
| துறை | : | மிர்டேல்ஸ் |
| Family | : | Combretaceae |
| குடும்பம் | : | காம்பிரிடேசி |
| Botanical Name | : | Terminalia arjuna |
| தாவரவியல் பெயர் | : | டெர்மினாலியா அர்ஜுனா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - வெள்ளை மருது; இலக்கியப் பெயர் - மருதம்;
ஆங்கிலம் - Arjuna; தெலுங்கு - யராமாடி;
சமஸ்கிருதம் - அர்ஜுனா; இந்தி - அர்ஜுனா

**தாவர இயல்பு:-**


மரம்- உயரமான அகன்ற பொலிவுள்ள இலையுதிர் மரம். 15 முதல் 20 மீட்டர் உயரமாகவும் மேலே 10 மீட்டர் அகன்றும் தழைத்தும் வளரும். அடிமரம் 4 முதல் 8 மீட்டர் சுற்றளவுடையது. 3-4 மீட்டர் உயரத்திற்கு மேல் பெரிய கிளைகளை நாற்புறமும் பரப்பி வளரும். எனவே இது சாலையோர மரமாக வளர்க்கப்படுகிறது.

**மலர்:-**

இருபாலானது, 4 முதல் 5 அடுக்கானது. மலரடிச்சிறு செதில்கள் இரண்டும் நீளமானவை.

**இலக்கியச் சான்று:-**

தமிழ் இலக்கியம் கண்ட ஐம்புலத்துள் மருதமும் ஒன்று. இது வயலும் வயலைச் சார்ந்த இடமுமாகும். இப்புலத்தில் வளரும் மருத மரத்தை வைத்தே இந்நிலம் இப்பெயர் பெற்றது. இம்மரம் காவிரி, வைகை முதலிய ஆறுகளின் கரைகளில் வளர்ந்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.



மருதம்
**Terminalia arjuna**

வைகையாற்றின் வார்மணல் கூடிய அகன்ற துறையில் ஓங்கி வளர்ந்த மருத மரக்காவில் வதுவை அயர்தலும் கூறப்படுகின்றது.

"வருபுனல் வையை வார்மணல் அகன்துறை
திருமரு தோங்கிய விரி காவில்
நறும்பல் கூந்தல் குறுந் தொடி மடந்தையொடு
வதுவை அயர்ந்தனை என்ப"

- அகநா. 36:9-12

மருதம் ஓங்கிய இம்மலர்க் காவில் காஞ்சி மரமும், மாமரமும் வளர்ந்திருக்குமென்றும் பதிற்றுப்பத்து கூறுகிறது.

"மருது இமிழ்ந்து ஓங்கிய நறுஇரும் பரப்பின்
மணல்மலி பெருந்துறைத் ததைந்த காஞ்சியோடு"

- பதிற். 23:18-19

"குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்"

- குறிஞ்.73

## முல்லை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Gentianales |
| துறை | : | ஜென்ஷியனேல்ஸ் |
| Family | : | Oleaceae |
| குடும்பம் | : | ஒலியேசி |
| Botanical Name | : | Jasminum auriculatum |
| தாவரவியல் பெயர் | : | ஜாஸ்மினம் ஆரிகுலேட்டம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - ஊசிமல்லிகை; இலக்கியப் பெயர் - முல்லை;

தெலுங்கு - அடாவிமுல்லா; சமஸ்கிருதம் - ஜுதிகா;

இந்தி - ஜூகி

**தாவர இயல்பு:-**

பல்லாண்டு வளரும் புதர்க்கொடி. 20 முதல் 30 மீட்டர் நீளம் படர்ந்து வளரும் ஏறுகொடி, தண்டுத்தொகுதி மெல்லியது, பசுமையானது. கூட்டு இலைகள் எதிரடுக்கில் அமைந்தவை.

**மலர்:-**

தனி மலரைக் காண்பது அரிது. மலர்கள் அழகானவை; நறுமணம் உள்ளவை; தண்டின் உச்சியிலோ, இலைக்கோணத்திலோ உண்டாகும். சங்க இலக்கியங்களில் மிகுதியாகப் பேசப்படும் மலர் முல்லையாகும்.

**இலக்கியச் சான்று:-**

காடும் மலையும் 'முல்லை' என்பது நூற்பா (தொல்பொருள்.6) ஆதலின் கார் காலத்தையும், மாலைப் பொழுதையும் குறிப்பது முல்லை மலர். இதனைப் பின்வரும் அடிகளில் காணலாம்.

"கார் நயந்து எய்தும் முல்லை"

- ஐங். 454


"எல்லை பைபயக் கழிப்பி முல்லை
அரும்புவாய் அவிழும் பெரும்புன் மாலை"
- நற் 369: 3-4

முல்லைப்பூ வாழ்த்து மலருமாகும். முல்லை மலர்களை நாழி எனப்படும் மரத்தாலான படியில் நெல்லோடு கலந்து வைத்துக் கைதொழுது சான்றோரும் மங்கல மடந்தையரும் எடுத்துத் தூவி வாழ்த்துவர் என்று கூறும் முல்லைப்பாட்டு.

"யாழிசை இன வண்டார்ப்ப நெல்லோடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க் கை தொழுது"
- முல்லைப். 7-9

"தில்லை பாலை கல்லிவர் முல்லை"
- குறிஞ்: 77





வகுளம்
**Mimusops elengi**

## வகுளம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-Class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Heteromerae |
| வரிசை | : | ஹெட்டிரோமீரே |
| Order | : | Ebenales |
| துறை | : | எபெனேல்ஸ் |
| Family | : | Sapotaceae |
| குடும்பம் | : | சப்போடேசி |
| Botanical Name | : | Mimusops elengi |
| தாவரவியல் பெயர் | : | மைமுசாப்ஸ் எலஞ்சி |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - இலஞ்சி;
ஆங்கிலம் - Spanish Cherry;
மலையாளம் - எலஞ்சி;
இந்தி - மௌல்சாரி
இலக்கியப் பெயர் - வகுளம்;
தெலுங்கு - பாகாடா;
சமஸ்கிருதம் - பாகுலா;

**தாவர இயல்பு:-**

அழகிய சிறுமரம். 4 முதல் 5மீ. உயரமானது. எப்பொழுதும் பசுமையாக இருக்கும், பசிய தனி இலை, பளபளப்பானது.

**மலர்:-**

தனிமலர், காம்புடன் இலைக் கோணத்தில் உண்டாகும். மழுங்கிய வெண்மை நிறமானது, மலர்ந்ததும் காம்பிலிருந்து கழன்று விழும். மலர் 'மகிழம்' எனவும் அழைக்கப்படுகிறது. சிவ பூஜைக்குரிய மலர்களுள் ஒன்றாக விளங்குகிறது.

**இலக்கியச் சான்று:-**

மணங்கமழும் மலர்களில், மகிழம்பூவின் மணம் மகிழ்ச்சிதரும். சங்க இலக்கியத்தில் மகிழம் பூவை 'வகுளம்' என்பர்.

"பசும்பிடி வகுளம் பல்இணர்க் காயா"
- குறிஞ். 70

என்றார் கபிலர், வகுளம் என்பதற்கு 'மகிழம்பூ', என்று உரை வகுத்துள்ளார் நச்சினார்க்கினியர். இங்ஙனமே பரிபாடலிலும் திணை மாலை நூற்றைம்பதிலும் ஒவ்வோரிடத்தில் மட்டும் வகுளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"குல்லை வகுளம் குருக்கத்தி பாதிரி" - பரி. 12:79

"நறுந்தண் தகரம் வகுளம் இவற்றை" - திணைமாலை நூற்:24

## வடவனம்

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-Class | : | Polypetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணையாதவை |
| Series | : | Bicarpellatae |
| வரிசை | : | பைகார்பெல்லேட்டே |
| Order | : | Lamiales |
| துறை | : | லேமியேல்ஸ் |
| Family | : | Lamiaceae |
| குடும்பம் | : | லேமியேசி |
| Botanical Name | : | **Ocimum gratissimum** |
| தாவரவியல் பெயர் | : | ஆசிமம் கிராடிசிமம் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - எலுமிச்சம்துளசி; இலக்கியப் பெயர் - வடவனம்;

ஆங்கிலப் பெயர் - Shrubby Basil; தெலுங்கு - நிம்மதுளசி;

சமஸ்கிருதம் - விருத்து துளசி; மலையாளம் - இராமதுளசி;

இந்தி - பான்துளசி

**தாவர இயல்பு:-**

புதர்ச்செடி. 1.3 மீ உயரம் வளரக்கூடியவை. இலைகள் 4-10. அல்லிவட்டம் 5-7 மி.மீ. நீளமும் பச்சை நிறமுடையது. தேவையற்ற இடங்களில் களையாக வளர்பவை.

**இலக்கியச் சான்று:-**

"வடவனம் வாகை வான்பூங் குடசம்" என்பது கூற்று (குறிஞ்.67) 'வடவனம்' என்பதற்கு நச்சினார்க்கினியர் 'வடவனப்பூ' என்று உரை கண்டுள்ளார். குறிஞ்சிப்பாட்டிலன்றி 'வடவனம்' என்பது சங்க நூல்களில் எங்கும் காணப்படவில்லை என்பர்.

## வள்ளி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Monocotyledons |
| வகுப்பு | : | ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Epigynae |
| வரிசை | : | எபிகைனே |
| Family | : | Dioscoriaceae |
| குடும்பம் | : | டையஸ்கோரியேசி |
| Botanical Name | : | Dioscorea oppositifolia |
| தாவரவியல் பெயர் | : | டையஸ்கோரியா ஆப்போஸிட்டிபோலியா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் - காவலகொடி; தெலுங்கு - எல்லகாடா

**தாவர இயல்பு:-**

ஒருபருவத்தாவரம், சுற்றிப்படரும் பின்னுகொடி; தண்டு கம்பிபோன்றது, மென்மையானது, வட்டவடிவம் கொண்டது; இலைகள் காம்புடையவை, எதிர் அடுக்கில் அமைந்தவை.

**மலர்:-**

மஞ்சரி 'பானிக்கில்', வகையைச் சார்ந்தது, மலர் மங்கலான வெண்மை நிறமுடையது.

**இலக்கியச் சான்று:-**

**"வாழை வள்ளி நீணறு நெய்தல்"**

- குறிஞ். 79

**"நறுமலர் வள்ளிப் பூநயந் தோயே"**

- பரி. 14:22

## வாகை

**தாவரவகைபாடு:**

| | |
|---|---|
| Class | : Dicotyledons |
| வகுப்பு | : இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-Class | : Polypetalae |
| துணை வகுப்பு | : அல்லி இணையாதவை |
| Series | : Calyciflorae |
| வரிசை | : கேலிசி:புளோரே |
| Order | : Rosales |
| துறை | : ரோசேல்ஸ் |
| Family | : Mimosaceae |
| குடும்பம் | : மைமோசேசி |
| Botanical Name | : Albizzia lebbeck |
| தாவரவியல் பெயர் | : அல்பிசியா லெபெக் |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் மற்றும் இலக்கியப் பெயர் - வாகை;
ஆங்கிலப் பெயர் - East Indian Walnut, Siris tree;
தெலுங்கு - டைரசனா; சமஸ்கிருதம் - சிரிஷா;
மலையாளம் - வாக; இலக்கியப் பெயர் - வாகை;
இந்தி - சிரிஸ்

**தாவர இயல்பு:-**

மிக உயர்ந்து கிளைத்துப் பரவிச் செழித்து வளரும் இலையுதிர் பெருமரம். வறண்ட நிலத்திலும் காடுகளிலும் வளரும்.

**மலர்:-**

கிளை நுனியில், இலைக்கோணத்தில் கொத்தாகப் பூக்கும். பளபளப்பானது, மங்கிய வெண்ணிறமானது.

**இலக்கியச் சான்று:-**

போரில் வெற்றி பெற்றவர் 'வாகை சூடினான்' என்பதே பெருவழக்காகும். வாகைப்பூவை 'வெற்றிப்பூ' என்று கூறும் சேந்தன் திவாகரம், போர்க்களத்தில் பேரரசர்களின் பெரும்படைகள் மோதிக் கொண்டு போர் புரிந்து 'வாகை' சூடினராவர் என்பர் நச்சினார்க்கினியர்.

"வடவனம் வாகை வான்பூங் குடசம்"
- குறிஞ். 67

"வாகை வெண்பூப் புரையும் உச்சிய
தோகை" - பரிபா. 14:7-8

"கூகைக் கோழி வாகைப் பறந்தலை"
- குறுந். 303:3



வாகை
**Albizzia lebbeck**



வாழை
**Musa paradisiaca**

## வாழை

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Monocotyledons |
| வகுப்பு | : | ஒருவித்திலைத் தாவரங்கள் |
| Series | : | Epigynae |
| வரிசை | : | எபிகைனே |
| Family | : | Musaceae |
| குடும்பம் | : | மியூசேசி |
| Botanical Name | : | **Musa paradisiaca** |
| தாவரவியல் பெயர் | : | மியூசா பாரடைசியாகா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் மற்றும் இலக்கியப் பெயர் - வாழை;
ஆங்கிலம் - Edible Banana; தெலுங்கு - ஆரட்டி;
மலையாளம் - வாழா

**தாவர இயல்பு:-**

நேராக வளரும் செடி, 5-10 அடி உயரம். இலை மிக நீளமானவை; அகன்ற தனியிலை; இளம் இலை 'குருத்தெனப்படும்'. இதில் நடுநரம்பின் ஒருபுறத்து அகவிலை உட்புறமாகச் சுருண்டும்; அதன் மேலே மறுபுறத்து இலைப்பகுதி சுருண்டும் சுற்றியும் இருக்கும்.

**மலர்:-**

மஞ்சரி - குலை, தார் எனப்படும். இதில் மலர்கள் காம்பின்றி மலர்த்தண்டில் ஒட்டி வளரும். வாழைக்குலையில் ஆண் பூக்கள் நுனியிலும், பெண் பூக்கள் அடியிலும் உண்டாகும்.

**இலக்கியச் சான்று:-**

சோழ நன்னாட்டின் வளத்தையும் வனப்பையும் பாடும் முடத்தாமக் கண்ணியார்.

"கோள் தெங்கின் குலை வாழை" - பொருந. 208

என்று குறிப்பிட்டார். இதே சோழ நாட்டின் சிறப்பினைக் கூற வந்த உருத்திரங்கண்ணனார்.

"கோள் தெங்கின் குலை வாழை"

- பட். பா. 19

என்று அந்த அடியினை அப்படியே கூறுவார்.

"வாழை வள்ளி நீணறு நெய்தல்"

-குறிஞ். 79

# வெட்சி

**தாவரவகைபாடு:**

| | | |
|---|---|---|
| Class | : | Dicotyledons |
| வகுப்பு | : | இருவித்திலைத் தாவரங்கள் |
| Sub-Class | : | Gamopetalae |
| துணை வகுப்பு | : | அல்லி இணைந்தவை |
| Series | : | Inferae |
| வரிசை | : | இன்ஃபெரே |
| Order | : | Rubiales |
| துறை | : | ரூபியேல்ஸ் |
| Family | : | Rubiaceae |
| குடும்பம் | : | ரூபியேசி |
| Botanical Name | : | Ixora coccinea |
| தாவரவியல் பெயர் | : | இக்சோரா காக்சினியா |

**இத்தாவரத்திற்கான பல்வேறு மொழிப் பெயர்கள்**

தமிழ் மற்றும் இலக்கியப் பெயர் - வெட்சி;
ஆங்கிலப் பெயர் - Jungle flame Ixora; தெலுங்கு - மேன்கனா;
சமஸ்கிருதம் - ரக்தகா, பன்துகா; மலையாளம் - தெச்சி;
இந்தி - ருக்மிணி, ரங்கன், ரஜனா.

**தாவர இயல்பு:-**

பெரிய புதர்ச்செடி, நன்கு தழைத்து வளரும், தனி இலைகள் எதிரடுக்கில் அமைந்திருக்கும்.

**மலர்:-**

மும்முறை கிளைத்த நுனிவளராப் பூந்துணர், கொத்துக் கொத்தாகக் கிளை நுனியில் இருக்கும். செக்கச் சிவந்த நிறம். முகை முள் போன்றது, நீளமானது.

**இலக்கியச் சான்று:-**

'வெட்சி' ஒரு புதர்ச்செடியாகும். இது தழைத்துக் கிளைத்துக் காணப்படும். காட்டில் வளரும் எனவும், இதன் கிளைகள் வளைந்திருக்குமெனவும், பல அரும்புகளை உடையன எனவும், 'முகையவிழுங்கால் மணங்கமழும்', எனவும் இம்மலர்களை மகளிர் தலையில் சூடிக்கொள்வர் எனவும், சங்கப்புலவர்கள் கூறுகின்றனர்.

"வெட்சி கானத்து வேட்டுவர் ஆட்ட"
- புறநா. 202:1

"தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி"
- குறிஞ். 63

"செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு"
- திருமுரு. 21



வெட்சி
**Ixora coccinea**

# V. Subject Index

## அருஞ்சொற் பொருட்கள்

1. Actinomorphic - ஆரச்சமச்சீர்
2. Alternate - மாற்றடுக்கு
3. Annuals - ஓராண்டுத் தாவரங்கள்
4. Axillary - இலைக் கோணம்
5. Bisexual - இருபால் பூ
6. Bract - மலர்ச் செதில்கள்
7. Bracteoles - பூக்காம்புச் செதில்கள்
8. Climbers - ஏறுகொடி
9. Compound leaves - கூட்டிலைகள்
10. Coriaceous - தோல்போன்றது
11. Cymose (or) determinate - நுனிவளரா பூந்துணர்
12. Deciduous - இலையுதிர்
13. Deltoid - முக்கோணவடிவம்
14. Disc - வட்டத்தட்டு
15. Hairy - நுண்மயிர்
16. Herbs - குத்துச்செடி
17. Hillside - மலைப்பாங்கில்
18. Inflorescence - மஞ்சரி
19. Lateral petals - பக்க இதழ்கள்
20. Leaflet - சிற்றிலைகள்
21. Mixed type inflorescence - கலப்பு பூந்துணர்
22. Non-branching - கிளைத்தளற்றது
23. Opposite decussate - குறுக்கு மறுக்கு இலை அடுக்கம்
24. Opposite side - எதிர் அடுக்கு

| | | | |
|---|---|---|---|
| 25. | Petals | - | அகவிதழ்கள்<br>அல்லி இதழ்கள் |
| 26. | Perennials | - | பல்லாண்டுத் தாவரங்கள் |
| 27. | Persistant | - | இலையுதிராதது |
| 28. | Posterior petal | - | பக்க இதழ்கள் |
| 29. | Racemose (or) indeterminate | - | நுனிவளர் பூந்துணர் |
| 30. | Sepals | - | புல்லி இதழ் |
| 31. | Sessile | - | காம்பற்ற |
| 32. | Shrubs | - | புதர்ச்செடி |
| 33. | Stipules | - | இலையடிச் செதில்கள் |
| 34. | Subsidiary buds | - | துணை மொட்டுக்கள் |
| 35. | Terminal buds | - | நுனி மொட்டுக்கள் |
| 36. | Twiners | - | சுற்றுக் கொடிகள் |

# VI. Bibliography

## துணைநூற்பட்டியல்


1. ந.மு. வேங்கடசாமி நாட்டார் **அகநானூறு**
   - தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு , 1986
2. நச்சினார்க்கினியர் - **கலித்தொகை**
   - தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, 1962
3. மார்க்கபந்துசர்மா, S.R. - **குறிஞ்சிப்பாட்டு விளக்கம்**
   - முத்தையா அச்சகம்,
   202, ஜானிஜான்கான் தெரு, சென்னை, 1961
4. கபிலர் - **குறிஞ்சிப் பாட்டு**
   - மர்ரே எஸ். ராஜம் வெளியீடு, 1981
5. உ.வே. சாமிநாதையர் - **குறுந்தொகை**
   - மூன்றாம் பதிப்பு, 1955
6. பேராசிரியர் முனைவர் கு. சீநிவாசன்
   **சங்க இலக்கியத் தாவரங்கள்**
   தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, 1987
7. நக்கீரர் - **திருமுருகாற்றுப் படை**
   மர்ரே எஸ். ராஜம் வெளியீடு, 1981.
8. உருத்திரங் கண்ணனார் - **பட்டினப்பாலை**
   - மர்ரே எஸ். ராஜம் வெளியீடு, 1981
9. உ.வே. சாமிநாதையர் - **பதிற்றுப்பத்து**
   - பதிப்பு 1980.
10. உ.வே. சாமிநாதையர் - **புறநானூறு**
    - ஏழாம் பதிப்பு, 1971
11. நப்பூதனார் - **முல்லைப்பாட்டு**
    - மர்ரே எஸ். ராஜம் வெளியீடு , 1981
12. George Watt - **A Dictionary of The Economic Products of India, 1989**

13. Mayuranathan, P.V. Livingstone, C. and Henry, A.N. - **The Flowering Plants of Madras City and its Immediate Neighbourhood.** Published by The Commissioner of Museums, Govt. of Tamilnadu, Madras, 1992

14. Gamble, J.S. - **Flora of the Presidency of Madras** Published under the Authority of the Secretary of State for India in Council, Calcutta, 1915.

15. Ramamoorthy, K.K. - **Flora of Tamilnadu (Part - I),** Published by Tamilnadu Textbook Society, Chennai, 1992

16. **ISBN** - **The Useful Plants of India** Publication and Information Directorate CSIR, New Delhi, 1992

17. Lushington, A.K. - **Vernacular List of Plants of the Presidency of Madras - Part IV - Tamil Index** - 1915.

18. Mathew, K.M. Dr. Fr., - **The Flora of the Tamil Nadu Carnatic** St. Joseph's College, Tiruchi, 1983

# VII. நூல் குறுக்கத்தின் முழுப்பெயர்

| | குறுக்கம் | | முழுப்பெயர் |
|---|---|---|---|
| 1. | அகநா. | - | அகநானூறு |
| 2. | ஐங். | - | ஐங்குறுநூறு |
| 3. | கலி. | - | கலித்தொகை |
| 4. | குறிஞ். | - | குறிஞ்சிப்பாட்டு |
| 5. | குறுந். | - | குறுந்தொகை |
| 6. | சிலப். | - | சிலப்பதிகாரம் |
| 7. | சிறுபா. | - | சிறுபாணாற்றுப்படை |
| 8. | திருமு./திரு. | - | திருமுருகாற்றுப்படை |
| 9. | நற். | - | நற்றிணை |
| 10. | பட்.பா./ பட்டினப். | - | பட்டினப்பாலை |
| 11. | பரி./பரிபா. | - | பரிபாடல் |
| 12. | பதிற். | - | பதிற்றுப்பத்து |
| 13. | புறநா. | - | புறநானூறு |
| 14. | பொருந. | - | பொருநராற்றுப்படை |
| 15. | பெரும்பா. | - | பெரும்பாணாற்றுப்படை |
| 16. | மலை படு. | - | மலைபடுகடாம் |
| 17. | முல்லைப். | - | முல்லைப்பாட்டு |